டிசம்பர்
62

குருக்ஷேத்திரம்
(சிறுகாவியம்)
கே. அய்யப்ப பணிக்கர்

எழுத்து

48

தலையங்கம் 234

பிச்சமூர்த்தி கவிதைகள் 235
வல்லிக்கண்ணன்

வெய்யிலும் நிழலும் 239
தருமு சிவராமு

சி. டே. லூவிஸ் கண்ட இலக்கியத் தத்துவம் 242
ரா. ஸ்ரீ. தேசிகன்

அரைசாண் 244
எஸ். வைத்தீஸ்வரன்

குருக்ஷேத்திரம் 245
கே. அய்யப்ப பணிக்கர்

எழுத்து அரங்கம் 250

காசு
50

எ ழு த் து

ஆசிரியர் :

சி. சு. செல்லப்பா

'எழுத்து' ஒவ்வொரு இங்கிலீஷ் மாதம் முதல்தேதியன்று வெளிவரும் மாத ஏடு. தனிப் பிரதி காசு 50. ஆண்டுச் சந்தா ரூ. 5-00 வெளி நாடுகளுக்கு ரூ. 6-00. சந்தா, கட்டுரை சம்பந்த மான கடிதங்கள் எல்லாம் 'எழுத்து' (Ezhutthu) 19-A, பிள்ளையார் கோயில்தெரு, திருவல்லிக் கேணி, சென்னை-5 என்ற முகவரிக்கு எழுதப் பட வேண்டும்.

4-ம் ஆண்டு

ஏடு 48

டிசம்பர் - 62

தலையங்கம்

நான்கு ஆண்டுகள்

அன்புள்ள வாசகர்களே,

இந்த ஏட்டோடு 'எழுத்து'க்கு நான்கு வயது பூர்த்தி ஆகிறது. இன்று தான் ஆரம்பித்த மாதிரி இருக்கிறது; 48 ஏடுகளை எழுத்து விரித்துவிட்டது. உங்கள் முன்பாக — அநேகமாக காலாகாலத்தில் தவறாமல் வெளிவந்து. கொஞ்சம் பெருமைப்பட்டுக் கொள்ளக்கூடிய விஷயம் தான். பிறந்த வீட்டுப் பெருமையை தன் சகோதரனிடமே சொல்லிக் கொள் வதுபோல உங்களுடன் இந்த பெருமையை சொல்லி பங்கிட்டுக் கொள்கிறேன். எழுத்துக்கு முன்னூறு சந்தாதாரர்கள் தான் இந்த ஆண்டில் இருந்திருக் கிறார்கள். அவர்களால் தான் 'எழுத்து' நடந்திருக் கிறது. அவர்களுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இதோடு, எழுத்து இந்த ஆண்டு கையைக் கடிக்க வில்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். மகிழ்ச்சி தான் என்றாலும் மகிழ்ந்தே போய்விட முடியாது. வந்த சந்தா தொகையை ஈவு வைத்து செலவழித்து 'வத்தக்குழம்பு அப்பளம்' சாப்பாடாக அவசியமானதை சாப்பிட்டதால் தான் இது சாத்ய மாயிற்று ஆனால் எழுத்து போஷாக்காக வளர முடியவில்லை. நான்கு வயது நிரம்பி ஐந்தாவது வயதில் முதல் வகுப்பில் சேர இருக்கும் சிறுவனுக்கு வேண்டிய தேவையான வசதியையும் போஷாக்கையும் வரும் ஆண்டு எழுத்து பெற்றாக வேண்டும். பெறும் என்று நம்புகிறேன்.

இதுக்கு முதல் படியாக தற்போதைய சந்தாதாரர் கள் ஒவ்வொருவரும் தவறாமல் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளவேண்டும்; கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, ஒவ்வொருவரும் — கிருஸ்துமஸ்ஸும் பொங்கலும் வருகிறது—ஒரு பரிசு சந்தா (ரூ 4—00 சலுகையாக) உங்கள் இலக்கிய நண்பர்கள் உங்கள் ஊர், தெரு புத்தகசாலைகளுக்காக சேர்த்து அனுப்பும் படியும் கேட்டுக் கொள்கிறேன்.

மூன்றாவதாக, உங்களுக்கு பரிச்சயமுள்ள இலக்கிய அன்பர்களிடம் எழுத்து பற்றி தெரிவித்து அவர்களையும் எழுத்து வாசகர்களாக ஆக்கும்படியும் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த மூன்றையும் நீங்கள் செய்தால் எழுத்து வரும் ஆண்டில் இன்னும் பெருநடைபோடும்.

இந்த ஆண்டும் பல சந்தாதாரர்கள் ரொம்ப பின் தள்ளி சந்தாக்களை அனுப்பினார்கள். இந்த டிசம்பரிலேயே அனுப்பிவிட்டால் ரொம்பவும் நல்லது. முன்கூட்டி திட்டமிட உதவும். தவறினால் ஜனவரி ஆரம்பத்தில் அவசியம் அனுப்பித்தரவும். இதையே சந்தா நினைவூட்டுத் தகவலாக கொண்டு இந்த ஏடு கிடைத்ததும் சந்தாவை அனுப்பிவைக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

இதோடு இன்னொரு முக்கியமான விஷயத்தையும் குறிப்பிட விரும்புகிறேன். 'எழுத்து பிரசுரம்' ஆரம் பித்திருப்பதைத்தான் சொல்கிறேன். யோசனை செய்து திட்டமிட்டு உருவாகி உள்ள காரியம் இது. இலக்கியத் தரமான நூல்களை சிறப்பான அமைப்புடன் அச்சிட்டுத் தரும் உத்தேசத்துடன் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது இது. ஐந்து புத்தகங்கள் வெளியாகி இருக்கின்றன. அவை பற்றிய தகவலை முன் ஏடுகளில் பார்த்திருப்பீர்கள். இந்த ஏட்டிலும் காணலாம். நீங்கள் ஒவ்வொருவரும் ஒரு செட் இவைகளை (சந்தா திட்ட சலுகை விலையில்) வாங்கி எழுத்து பிரசுரம் வளரவும், வெளிவர வாய்ப்பு இல்லாமல் இருக்கக்கூடிய நூல்களை மேலும் மேலும் வெளிக்கொணர எனக்கு ஊக்கம் அளிக்கவும், நீங்கள் ஆதரவு தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். எழுத்து சந்தாவுடன் சலுகைவிலை தொகையான ரூ. 16-00யும் சேர்த்து அனுப்பவும். எழுத்து பிரசுரம் வெளியீடுகள் பற்றியும் உங்கள் இலக்கிய நண்பர் களிடமும் தெரிவியுங்கள். புத்தகசாலைகளுக்கு அறிமுகப் படுத்தவும்.

இலங்கை சந்தாதாரர்களுக்கு ஜனவரி ஏட்டை வி. பி. பி.யில் அனுப்பிவைக்கிறேன். வி. பி. பி. பெறு வதுக்கு (சர்க்காரின் புதிய உத்தரவுகள்படி) ஏதாவது சிரமம் இருக்குமானால் முன்கூட்டியே தகவல் அறிவிக் கவும், டிசம்பரிலேயே. வேறு ஏற்பாடுகள் செய்ய ஏதுவாக இருக்கும்; சிரமம் இருக்காது என்றால் அனுப்பப்படும் வி.பி.பி.யை தவறவிடாமல் பெற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன். இந்த ஆண்டு சிலர் தவறவிட்டு விட்டதால் சிரமம் ஏற்பட்டது.

'எழுத்து' பற்றி இந்த ஏட்டில் லௌகீகமாக பேசிவிட்டேன். இலக்கியரீதியாக அடுத்த ஏட்டில், விரிவாக.

மீண்டும் கேட்டுக்கொள்கிறேன். உங்கள் புதுப் பித்த சந்தா டிசம்பரிலேயே கிடைக்கச் செய்யவும், உங்கள் ஆதரவால் வளரும் எழுத்துக்கு.

சி. சு. செல்லப்பா

பிச்சமூர்த்தி கவிதைகள்

வல்லிக்கண்ணன்

'பிழைக்கத் தெரியாத பெரும்பித்து' என்று பலராலும் கருதப்பட்ட கவிஞர் பிக்ஷு அவர்களை இருபத்தைந்து வருஷங்களுக்கு முன்பு நான் அறிய நேர்ந்தது.

1937-ம் வருஷம் தமிழில் அற்புதமான இலக்கிய மலர் ஒன்று வெளிவந்தது, 'தினமணி ஆண்டு மலர்' என்று பெயர்பெற்றிருந்த அதில் மறக்கமுடியாத படைப்புகள் பல பிரசுரமாகியிருந்தன. புதுமைப்பித்தனின் 'கனவுப் பாதை' மௌனி'யின் 'எங்கிருந்தோ வந்தான்', இளங்கோவனின் 'சாவே வா!' முதலியவற்றுடன், பிக்ஷுவின் 'கிளிக் கூண்டு, எனும் அருமையான கவிதையும் அம் மலரில் இடம் பெற்றிருந்தது. அதுதான் நான் படித்த பிக்ஷுவின் முதல் கவிதை.

காவேரிக் கரையோரக் காட்சிகளை—'காலன் செய் ஹோமத்தில் உடல் நெய்யாகும் காட்சி'யையும் சேர்த்துத்தான்—கவிதை அழகாக எடுத்துக் காட்டியது. மணலில் கிளிக்கூண்டு கட்டுகிறார்கள் சில சிறுவர்கள். மறுநாள் காலையில் வந்து பார்த்தால் கூண்டில் கிளிகள் ஒடுங்கியிருப்பதைக் காண முடியும் என்று நம்புகிறார்கள். கிளிகளை அவர்கள் வர்ணிக்கும் அழகும் உற்சாகமும் கவிதையில் உணர்ச்சியோடு கலந்திருந்தன. அந்தச் சிறுவர்களை பைத்தியங்கள் என்றே மற்றவர்கள் மதித்தார்கள். நானும் கிளிக் கூண்டு கட்டுகிறவன் தான்: எண்ணற்ற கூண்டுகள் கட்டிவருகிறேன் என்றார் கவி. அவர் கட்டிய கூண்டுகளைக் கண்டு பலரும் பரிகசிக்கிறார்கள்—'பிழைக்கத் தெரியாத பெரும் பித்தே!' என்று. நண்பர்கள் போற்றுகிறார்கள். 'தொட்ட இடத்தில் தங்கத்தைத் தேக்கினாய். தொடாத தந்தியில் இன்னிசை எழுப்பினாய்' என்று.

கவிஞர் பிக்ஷுவைப் போற்றும் பித்தர்கள் வரிசையில் அன்றே நானும் சேர்ந்துவிட்டேன். 'கிளிக்கூண்டு' என்கிற அருமையான கவிதை புதுக் குரலாக இருந்தது, உள்ளடக்கத்திலும் உருவத்திலும்தான். அன்று நான் எழுத்தாளன் ஆகியிருக்கவில்லை. எனக்கும் விமர்சனம் பண்ணத் தெரியும் என்று நான் எண்ணியதில்லை. ஆனாலும், தமிழ்க் கவிதைத் துறையில் புதுவழி காண்பவர் பிக்ஷு என்று புரிந்துகொள்ளக்கூடிய சக்தி எனக்கு இருந்தது.

தமிழில் 'வசன கவிதை' என்ற பேச்சும், அத்துறையில் ஆக்கவேலையும் முளைவிட்டு எழுந்து கொண்டிருந்த காலம் அது. பாரதிக்குப் பிறகு, பாரதி துணிந்து கையாண்ட புதிய பரிசோதனையை தொடர்ந்து வளர்க்கும் பணியை உற்சாகத்தோடு ஏற்றுக்கொண்டவர் பிக்ஷு என உணரமுடிந்தது; கு. ப. ராஜகோபாலனும் அவரோடு புதிய சோதனைகளில் ஆர்வத்தோடு ஈடுபட்டு, வெற்றிகளைக் கண்டார் என்பதையும் புரிந்துகொண்டேன்.

கு. ப. ரா. 'வசன கவிதை'யை வசன கவிதையாகவே வளர்த்தார். ஆனால் பிக்ஷு 'வசனகவிதை' என்ற தன்மையிலிருந்து அதை உயர்த்தி, 'புதுக் கவிதை' எனும் தகுதியை அதற்குத் தந்து, உண்மையான கவிதைகளைப் படைத்து வந்திருக்கிறார்.

'கிளிக் கூண்டு' எனும் கவிதைக்குப் பிறகு, 'அணில் கொம்பிலே, ஆமை கிணற்றிலே!' என்ற கவிதையைக் காண நேர்ந்தது.

'நாங்களோ கலைஞர்!
ஆமைபோல் உணர்ச்சியின்
கிணற்றில் அமிழ்வோம்;
முதுகோடு கொண்டு விதியை எதிர்ப்போம்
கீழுலகேழும் தயங்காது இறங்கி,
ஜீவன்கள் லீலையில் கூசாது கலப்போம்.'

என்ற கவிக்குரல் என் உள்ளத்தைக் கவர்ந்தது.

கவிதைத் துறையில் புதிய பாதை வகுத்து முன்னேறிக் கொண்டிருந்த இலக்கிய உலக இரட்டையர்கள் எதிர்ப்புக்கு ஆளாக வேண்டிய அவசியமும் ஏற்பட்டது. 'இது கவிதை அல்ல. இலக்கணத்துக்கு ஒத்துவராத இவற்றை கவிதை என்று எப்படி ஏற்பது?' என்று எழுத்துலகப் பெரியவர்கள் எதிர்த்தார்கள். கவிதை என்றாலே 'செவிநுகர் இனிமைபெற்ற செஞ்சொல் கதம்பம்' தான், வசன கவிதை 'செவிநுகர் இனிமை' பெறுவதில்லை, பெற முடியாது என்று சொன்னார்கள் எதிர்ப்பாளர்கள். இலக்கணம் தெரியாததனால்தான் இவர்கள் இப்படி எழுதுகிறார்கள், இதுதான் சரி என்று கட்சியும் கட்டுகிறார்கள் என்றார்கள்.

'இலக்கணம் சீனத்து வித்தை ஒன்றுமல்ல. அதைக் கற்றுக்கொள்வது எங்களுக்கு இயலாத காரியமுமல்ல. கவிதை வளர்வதற்கு இலக்கணம் ஒரு தடை. கவிதைக்குக் கட்டுப்பாடுகள் தேவையில்லை இருக்கக்கூடாது—என்றே நாங்கள் கருதுகிறோம்' என்று கு. ப. ராஜகோபாலன் அறிவித்தார். 'கவிதை செவிநுகர் இனிமை பெற்றிருக்க வேண்டும் என்பது சரிதான். ஆனால் செவிநுகர் இனிமைபெற்றதெல்லாம் நல்ல கவிதை ஆகிவிடமுடியாது. உண்மையான கவிதை செவிநுகர் இனிமை பெற்றே திகழும் என்று உறுதியாய் சொல்ல முடியும்' என்றும் கு. ப. ரா. கூறினார்.

கு. ப. ராஜகோபாலன் கூற்று எவ்வளவு உண்மையானது என்பதை பிக்ஷுவின் கவிதைகள் உணர்த்தின. அவை உண்மையான கவிதைகள். செவிநுகர் இனிமை பயக்கும் செஞ்சொல் மணிகளும் கூட.

'மணிக்கொடி' 'சக்தி' ஜெயபாரதி' ஆகிய பத்திரிகைகளில் சோதனை முயற்சிகள் செய்த பிக்ஷு என்

இற ந. பிச்சமூர்த்தி 1941க்குப் பிறகு எதிர்ப்பு, கண்டனம், கிண்டல் முதலியவைகளை சட்டை செய்யாமல் ஊக்கத்தோடு கவிதைகள் சிருஷ்டிப்பதில் ஈடுபட்டார். திருச்சியில் வி. ரா. ராஜகோபாலன் நடத்திய 'கலாமோகினி' அவரது கவிதைப் பரிசோதனைகளுக்கு உரிய தளமாகத் திகழ்ந்தது. மறுமலர்ச்சி இலக்கிய 'மாதம்—இரு முறை'யாகப் புத்துருவம் பெற்ற 'கிராம ஊழியன்' பிக்ஷுவுக்கு பக்கபலமாகவும், நல்ல மேடையாகவும் உதவியது. ஆகவே, 1943, 44, 45 ஆண்டுகளில் பிச்சமூர்த்தி சிறந்த கவிதைகளை நிறையவே இயற்றித் தந்திருக்கிருர்.

'கிராம ஊழியன்' பத்திரிகையில் பணிபுரிவதற்காக நான் வந்து சேர்ந்த பிறகுதான்—பிக்ஷுவின் ரசிகனுகவும், பிக்ஷு கவிதைகளைப் போற்றும் பித்தனுகவும் நான் மாறி ஆறரை ஆண்டுகள் கழித்த பிறகே—ந. பிச்சமூர்த்தி அவர்களை நான் துறையூரில் சந்திக்க நேர்ந்தது.

இதற்குள் நானும் 'பிழைக்கத் தெரியாத பித்து'வாக மாறியிருந்தேன். நானும் வசன கவிதை முயற்சிகளில் ஆர்வம் காட்டி வந்தேன். 'கிராம ஊழியன்' பத்திரிகை வசன கவிதைக்கு முக்கியத்துவம் கொடுத்துவரவே, மீண்டும் எதிர்ப்பு தீவிரமாயிற்று. 'பாரதி அடிச்சுவட்டிலே' என்று 'கிராம ஊழிய'னில் கவிதைகள் வந்துகொண்டிருந்ததால், அதை ஏற்றுக்கொள்ளாத சிலர், 'பாரதி, அடி இவர்கள் செவிட்டிலே!' என்று பிரார்த்தித்தார்கள்.

இரண்டாவது மகாயுத்தத்துக்குப் பிந்திய காலம் அது. சென்னை ஓட்டல்களில் நல்ல இட்டலி கிடைத்ததில்லை. 'பஸ்ஸரட் இட்டலி' என்று ஒன்றைக் கண்டுபிடித்து விற்பனை செய்துவந்தார்கள். 'வசன கவிதை என்பது பஸ்ஸரட் இட்டலி மாதிரி' என்று எதிர்ப்பாளர்கள் குறிப்பிட்டார்கள். வெஜிட்டபிள் பிரயாணி, கோவேறு கழுதை, பஸ்ரட் இட்டலி, வசனகவிதை—இந் நாலும் 'இப்பந்தி ஜாதி'யைச் சேர்ந்தவை என்று எழுதினுர்கள்.

பிச்சமூர்த்தி விவாதங்களில் கலந்துகொண்டதுமில்லை; தமது கவிதைக் கொள்கையை எடுத்துச் சொல்லும் விளக்கக் கட்டுரைகளை அன்று எழுதியதுமில்லை. கவிதைகளை படைப்பதிலேயே கருத்தாக இருந்தார்.

'வசன கவிதை என்ற பெயர் பிடிக்கவில்லை என்ருல் அப்படிச் சொல்லவேண்டாம். யாப்பில்லாக் கவிதை, இலக்கணம் இல்லாத கவிதை, கட்டில் அடங்காக் கவிதை என்று சொல்லட்டுமே. நான் கவிதை எழுதுகிறேன். என் உள்ளத்து உணர்ச்சிகளுக்கு சொல் உருவம் கொடுக்கிறேன். என் கவிதை கடிவாளம் இல்லாத குதிரை' என்று தான் அவர் சொல்லிவந்தார். என்னிடம் என் கவிதைகள் பற்றிய விளக்கம் எதுவும் கேட்கவேண்டாம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

'கூடுவாய்' என்ன இயற்கை
காதலைக் கைபிடித்தேன்;
கருவளை குலுங்கு கையாள்
காலத்தில் குழந்தை தந்தாள்;
குழந்தையின் பொருளைச் சொல்லு
காதலை ஈந்த தாயே,
என்று நான் கேட்கும்போது
சிரித்தவள் கைவிரித்தாள்''

என்று கவிதையே எழுதிவிட்டார் பிக்ஷு.

'பிறப்பிடம்' என்ற அக் கவிதையில் கவி மேலும் சொல்லுகிருர்.

கண்ணிஞல் கிழக்கைப் புணர்ந்தேன்.
கதிரவன் தோன்றிவிட்டான்!
அயர்வுடன் இரவு கண்டேன்,
அம்புலி ஆடி வந்தாள்!
அலைத்திடும் மனத்திலேறி
அகண்டத்தில் ஊரும்போது
சாவு, மெய், இன்பம் சேர்ந்த
அகிலமும் உருளக் கண்டேன்.
வியப்பு, திகைப்பு மிஞ்சும்
வேதனை வடிக்க வேண்டி
நெஞ்சத்தின் ஆணைப் பார்த்து
கவிதை நீ எழுது என்ன,
ஓசைப்பெண் இடை அணைந்து
வாயில் நீ முத்தமிட்டான்.
தீப் பிடித்த வெண் நெருப்பில்
உருகி வந்த என் கவியில்
உன் உருவை ஒளித்துவிட்டு
என் பேரை மின்ன விட்டாய்
நண்பர்கள் நயந்து வந்து
கவி பொருள் சொல் என்கிருர்
பிறப்பிடம் எங்கென்கின்ருர்.

இப்படி கவி கடவுளையே கேட்கிருர்.

சிலந்திபோல் நூலிழுத்தேன்
அண்டமாம் கூடு கண்டாய்.
ஈப்போல கூட்டில் சிக்கிக்
கவி ஒலி கொட்டி விட்டுப்
பொருள், இடம் கேட்டுவிட்டாய்,
விடை தேடி உலகு வந்தேன்

என்று கடவுள் கவியிடம் சொல்கிருர்.

கடவுளுக்கே சிருஷ்டியின் பொருள் தெரியாத போது, கவிக்குத் தனது படைப்பின் அர்த்தம் எவ்வாறு தெரியக்கூடும் எனும் பொருள் புதைந்து கிடக்கிறது 'பிறப்பிடம்' என்ற கவிதையில்.

பிச்சமூர்த்தி, கவிதைக்கு விளக்கமும் எதிர்ப்புக்கு சமாதானமும் கூறிக்கொண்டிருக்கவில்லை என்ருலும், 'இவருக்கு இலக்கணம் தெரியாது. அதனுல் தான் இப்படிப்பட்ட கவிதைகளை எழுதுகிருர்' என்று பேசியவர்களுக்கு பதிலளிக்க ஆசைப்பட்டார் என்றே தோன்றியது. தமது இலக்கணத் தேர்ச்சியை புலப்படுத்துகிற—யாப்பிலக்கண அமைதிகளுக்குக் கட்டுப்பட்ட—கவிதைகள் பலவற்றை அவர் 1944—45 காலகட்டத்தில் எழுதித்

தந்தார். அவை எல்லாம் 'கிராம ஊழியன்' மாதம்—இரு—முறையில் பிரசுரமாயின. என்றாலும்—

'நான் பிறந்த லக்கினமோ
கடவுள் தந்த குரல் சிறப்போ
மண்ணொட்டு என்னிலில்லை,
பாட்டிலொரு பழமை இல்லை.
வான் நோக்கி மிதித்தேற
என் குரலால் விண்மணியும்
உலகெங்கும் ஊடுருவப்
புது இசைகள் பொழிந்துவரும்.
காதலின் ஏக்கம் முதல்
இசை வல்லோர் ரவைகள் வரை
என் நெஞ்சில் வைத்துவிட்டான்

என்று 'மகாகவி'க் குரலை இசைக்கும் கவியுள்ளம் கட்டுப்பாட்டுக் குள்ளேயே சுற்றிவர இணங்குமா?

'அணிலைப் போல் கொம்பேறி
ஒளிக்கனி கடிப்போம்.
காலையின் மேலேறி
செம்மலர் உதிர்ப்போம்
மேலுலகேழும் படகோட்டிச் செல்வோம்
வான் பொருள் தேடித் தெருக்களில்
தருவோம்'

என்று பெருமையோடு அறிவித்த கலைஞர் இலக் கணச் சிறைக்குள் எவ்வாறு ஒடுங்கிக் கிடப்பார்? மீண்டும் புதிய வழிகளை வகுத்து முன்னேறினார் அவர்.

1947ல் 'கிராம ஊழிய'னும் அதன் பிறகு 'கலா மோகினி'யும் மரணம் அடைந்தன. புதுக் கவிதையும் சமாதியோகம் பயில்வதில் ஆர்வம் காட்டியது.

புதுக் கவிதை தமிழ் மொழிக்கு ஒத்துவராத விஷயம்; அது செத்துவிட்டது; அதன் சாவை புதுக் கவிதையின் கர்த்தாக்கள் கூடத் தடுக்க முடிய வில்லை என்று 'வசன கவிதை' எதிர்ப்பாளர்கள் கெக் கலி கொட்டினார்கள். அவர்கள் தீர்க்கதரிசிகளும் அல்ல. மொழி வளர்ச்சி, புதிய சோதனைகள் பற்றி அவர்கள் கொண்டிருந்த எண்ணங்கள் சரியானவை யும் அல்ல, காலம் இதை நிரூபித்துவிட்டது.

'பிழைக்கத் தெரியாத பித்துக்கள்' கூட்டத்தில் தானும் ஒருவர் என்பதை சி. சு. செல்லப்பா நாட் டுக்கு உணர்த்த முன்வந்தார். 'எழுத்து'வை துணை கொண்டு எழுந்து நிற்கத் துணிந்தது புதுக் கவிதை. 'எழுத்து' நல்ல பக்கபலமாக அமையவும், அது தலைநிமிர்ந்து முன்னேறத் தொடங்கியது. வெற்றி யும் கண்டது. பிச்சமூர்த்தியின் கவிதைகளும் புது வேகத்தோடு, புதிய ஒளியோடு, புதிய உணர்வோடு பிறக்கலாயின.

இருபத்தைந்து வருஷ காலமாக அற்புதமான கவிதைகளை இயற்றி வரும் ஒரு நல்ல கவியின் சிருஷ்டிகள்—என்றோ புத்தகமாக வந்திருக்கவேண் டிய இலக்கியப் படைப்புகள்—இப்போ தான் நூல் வடிவம் பெற முடிந்திருக்கிறது. தமிழ்நாட்டின் இலக்கியச் சூழ்நிலையையும், புத்தகவெளியீட்டுத் துறையின் வியாபார மோகத்தையும் இது பிரதி பலிக்கிறது என்று கொள்ளலாம். அதே வேளையில் இதை புதிய முயற்சியின்—புதுக் கவிதையின்—கவி ஞர் பிக்ஷுவின் வெற்றி என்று ஏற்று, மகிழ்ச்சி அடைவதும் சாத்தியமாகிறது. பிச்சமூர்த்தி கவிதை களை செல்லப்பா 'எழுத்து பிரசுரமாக' தயாரித்தி ருப்பதை மாபெரும் சாதனை என்று தான் குறிப்பிட வேண்டும்.

பிச்சமூர்த்தி கவிதைகளின் சிறப்புகளைக் குறித்து மற்ற நண்பர்கள் நயம் நிறைந்த ஆய்வுரை கள் தரக்கூடும் என்பதனாலும், புதுக் கவிதையின் வளர்ச்சிப் போராட்டத்தில் பங்கு கொண்டவன் என்பதனாலும், நான் இந்த சந்தர்ப்பத்தில் புதுக் கவிதை வரலாற்றை ஒருவாறு அறிமுகப்படுத்த ஆசைகொண்டேன். கவிதைப் படைப்பில் பிச்ச மூர்த்தி கொண்டுள்ள முக்கியமான கருத்து ஒன்றை இப்போது சுட்டிக்காட்டவேண்டியது அவசியம் என்று கருதுகிறேன். அது புதுக் கவிதையின் பரிணாம வளர்ச்சியைக் காட்டும் ஒரு அளவாகவும் அமைகிறது.

தமிழில் வசன கவிதை எழுத முன்வந்தவர்கள் பாரதியின் வசன கவிதைகள் பற்றி குறிப்பிடத் தவறியதில்லை. வசனகவிதை எதிர்ப்பாளர்கள் இதை வன்மையாகத் தாக்கினார்கள். 'பாரதி எழுதிவைத்தது வசன கவிதை அல்ல, வசனம் தான். பாரதி கவிதைகளை தொகுத்து வெளி யிட்டவர்கள் அறிந்தோ, அறியாமலோ காட்சி கள் என்ற வசன சிருஷ்டிகளை காவியத் தொகுதியில் இணைத்துவிட்டார்கள். அதை வசன கவிதை என்று பிடித்துக்கொண்டு இப்போது சிலர் பேயாட்டம் போடுகிறார்கள்' என்று அவர்கள் விவா தித்தார்கள். சமீபத்தில் பிரசுரிக்கப்பட்ட பாரதி தொகுப்புகள் சிலவற்றில் 'காட்சிகள்' வசனத் தொகுதியிலேயே இணைக்கப்பட்டுள்ளது.

பாரதி எழுதியது வசனமா, வசன கவிதையா என்கிற ஆராய்ச்சி இங்கு தேவை இல்லை. நான் சொல்ல விரும்புவது—பாரதி வசன கவிதைகள் எழுதாமல் விட்டிருந்தால் கூட, தமிழ்மொழியில் வசன கவிதை எனும் சோதனையும், புதுக்கவிதை முயற்சிகளும் தலைதூக்கி இருக்கும். இதில் சந்தே கம் வேண்டியதில்லை. அமெரிக்கக் கவிஞன் வால்ட் விட்மன் கவிதைத்துறையில் செய்திருந்த ஆக்க வேலை உலகின் சகல மொழிகளிலும் தன் ஆகர் ஷிப்பை பரப்பி இருந்தது, தமிழும் தமிழ் கவிதை யும் அந்த அலைவீச்சுகளால் பாதிக்கப்படாமல் இருந் திராது. வால்ட்விட்மனின் புதுக்கவிதை வேகம் தான் பிக்ஷுவின் கவிதை முயற்சிக்கு வித்திட்டது. இதை அவரே குறிப்பிட்டிருக்கிறார்.

கவிதைக்கு ஓசை முக்கிய அம்சம் என்ற கருத்து நிலைபெற்றுள்ளது. கவிதை 'செவிநுகர் இனிமை' பெற்றிருக்கவேண்டும் என்று எதிர்பார்க்கப் பட் டது. பிக்ஷு கூட, 'நெஞ்சத்தின் ஆணைப் பார்த்து—கவிதை நீ எழுது என்ன—ஓசைப் பெண் இடை அணைந்து—வாயில் நீ முத்தமிட்டான்' என்று தான் குறிப்பிட்டுள்ளார், நாளடைவில், உண்மையான கவிதைக்கு ஓசை முக்கியமல்ல என்ற முடிவுக்கு பிச்சமூர்த்தி வந்துவிட்டார். இதை 'எழுத்து' ஏடு ஒன்றில் அவர் தெளிவாக ஒரு கட்டுரையில் விளக்கி யிருக்கிறார். இதே எண்ணத்தை 'காட்டு வாத்து'

கவிதைத் தொகுதியின் முன்னுரையிலும் அவர் வலியுறுத்துகிறார்.

'புதுக் கவிதைக்கு ஏற்ற வாழ்நிலை ஏற்பட்டுவிட்டதை நாம் மறக்கக்கூடாது. அச்சு யந்திரமும், லைப்ரரிகளும், மௌன வாசிப்பும் தோன்றிய பிறகு அவை தோன்றாத காலத்தில் அமல் செலுத்திய கேள்வி மரபும் ஸ்தூலக் காதின் ஆட்சியும் கண்ணெதிரே மறைந்து வருவதைக் கண்டபிறகு கவிதையை வேறுவிதமாக அமைக்க—ஏன் முயலக் கூடாது?' என்று பிச்சமூர்த்தி கேட்கிறார்.

உரக்கப் படித்து, ஓசை நயத்தையும் சுவைப்பதே கவிதையை ரசிக்க வேண்டிய முறை என்பது நெடுநாளைய வழக்கம். ஆனால், கவிதைகளையும் கண்ணால் கண்டு, உள்ளத்தால் உணர்ந்து, சுவைக்கும் பழக்கம் பெரும் அளவுக்குப் பரவிவிட்டது. இந்நிலைமையில் கவிதை ஓசைநயம் பற்றி அதிக அக்கறை காட்டிக்கொண்டிருக்க வேண்டியதில்லை என அவர் முடிவு செய்கிறார்.

ஆனாலும், பிச்சமூர்த்தியின் கவிதைகளில் ஓசையின் இனிமையும் ஓட்டமும் இயல்பாகக் கலந்து, நயம் நிறைந்து துளும்புகின்றன. அவரது கவிதைகளைப் படிக்கும்போதே இதை எளிதில் உணரமுடியும்.

'காலையின் வண்ணமும் மாதுளை முத்தும்
நோயற்ற நாடியில் பாயும் உதிரமும்
பெண்ணிதழ்ப் பவழமும் செம்பஞ்சுச் சாறும்
தாமரைச் சிவப்போ!' (பொற்றாமரை)

வான் கருவில் இருள்மலைகள்
வரிசையாய் விம்மி நிற்க;
இருள் மலையின் மைக்குகையில்
ஒளிமாடு ஓலமிட
கதிர்க்கன்றின் சோகஒலி
கடுஞ்சிறையில் கம்ம;
பரிதி எனும் பொன்பருந்து
பாய்ச்சலின்றிக் கிடக்க:
பரிதித்தீ பேய்க்குகையில்
தென்பின்றித் தூங்க;
குகைவாயில் கோரைப்பல்
இருள் முகமும் காட்டி,
விருத்திரனும் வெம்அசுரன்
வேங்கை போல் நின்றான்.
(இருளும் ஒளியும்)

இருள் பழுத்த இரவினில்
விண்ணின் மீன்கள் உதிர்ந்தன;
உயிர் முடிந்த சருகுகள்
ஊசலாடி விழுந்தன;
நிழலும் தீரும் முடிய மாந்தா
மாரகனடி சேர்ந்தனர்;
பூவும் பிஞ்சும் காயும் கிழமும்
சாய்ந்தது நெஞ்சில் காய்ந்தது
(சாகுருவி)

உஷை
செம்பட்டுச் சல்லடம்
சொகுசாக உடுத்தி
செம்மலர்க் கூடையை
உடுப்பில் இடுக்கி
சதங்கைகள் சிலம்ப
கீழ்வானில் முளைத்தாள்.

'புன்சிரிப்பு' எனும் கவிதை :

சின்னஞ்சிறு விரல்கள்
சிங்காரத் தாமரைகள்
கண்காணாப் பூப்பறித்துப்
பூஞ்சோலை காட்டையிலே,
சின்னஞ்சிறு கால்கள்
சொகுசான செம்மின்னல்
வான்தாங்கக் கால்தூக்கி
விந்தைவழி பயிலையிலே
நாவல்பழம் போன்ற
நீச்சற்ற நீலவிழி
வெண்சுவத்தின் மேலேறிச்
சிரித்தெழில் கொட்டையிலே,
'சிற்றுயிரே! என் கண்டாய்
சிரிப்பதேன் நீ!' என்றேன்.

உணர்வு துள்ளும் இக் கவிதைகளில் ஓசை ஜாலம் செய்து இனிமை சேர்ப்பதை உணர முடிகிறதல்லவா? ஆனால், இவை எல்லாம் 1944க்கு முன்பு அவர் படைத்தவை. 1960 க்கும் பிறகு அவர் எழுதி வருகிற கவிதைகளில் இந்தவிதமான ஒலி ஓட்டம் அவ்வளவாக இல்லை என்றே சொல்லவேண்டும். 'காட்டு வாத்து' தொகுதியில் உள்ள நீண்ட கவிதைகளிலும், சிறுசிறு கவிதைகளிலும் இந்த மாறுபாட்டைக் காணமுடிகிறது.

'இம் முயற்சி பாதையில்லாக் காட்டில் பயணம் செய்யும் முயற்சி. இம்மாதிரிக் கவிதையின் அமைப்பு முறையில் அனுபவத்தால் மாறுதல் ஏற்பட்டுக் கொண்டே போகும். இத் தொகுப்பிலும் அம் மாறுதலைக் காணலாம்' என்று கவியே குறிப்பிட்டிருக்கிறார்.

கவிதையை அவரவரே அனுபவித்துத் தான் உணரவேண்டும் என்பர். இது நியாயமான கூற்றே, அதிலும், புதுக் கவிதைகளின் நயங்களை. கவிதைக்குக் கவிதை காணப்படும் மாறுபாடுகளை, கருத்து நயத்தை. கவியின் ஆற்றலை எல்லாம், எவ்வளவு முயன்றாலும் ஒருவன் தெளிவாக எடுத்துச் சொல்லிவிட முடியாது. 'காட்டு வாத்து' தொகுப்பில் உள்ள கவிதைகளும் அத்தகையனவே. அவை உண்மையான கவிதைகள். உயர்வான படைப்பு. படித்துப் படித்து, சுவைத்து மகிழ்வதற்கு நமக்குக் கிடைத்துள்ள இலக்கியச் செல்வம் அது.

(சென்ற 21-11-62 அன்று ந. பிச்சமூர்த்தியின் கவிதைத் தொகுப்பான 'காட்டு வாத்து' வெளியீட்டு விழா சென்னையில் பேராசிரியர் பி. மகாதேவன் தலைமையில் நடைபெற்றது. பேராசிரியர் ஆர். பாஸ்கரன் நூலை அறிமுகப்படுத்தி வெளியிட்டார். வல்லிக்கண்ணன், சி. கனகசபாபதி, க. நா. சுப்ரமண்யம் ஆகியோர் நூலை ஆய்வு செய்து பேசினார்கள். வல்லிக்கண்ணன் பேச்சு இங்கு தரப்படுகிறது. அடுத்த ஏட்டில் சி. கனகசபாபதி பேச்சு வெளியாகும்.)

வெய்யிலும் நிழலும்

தருமு சிவராமு

(சென்ற ஏட்டின் தொடர்ச்சி)

தன் பேர் முதலிய தூலமான முத்திரைகளைப்பற்றிக் கூடக் கவலைப்படாத மௌனி 'காதல்' போன்ற தூல அனுபவங்களுக்காக சுயசரிதைக் கதைகள் எழுதினார் என்பது முரணானது. மேலும் காதல் அவருக்கு ஒரு தூல அனுபவமே அல்ல. அதுவே இன்னொரு வாழ்வுக்கு பதிலாக நிற்கும் சாயலாகும்.

அந்த இன்னொரு வாழ்வைத்தான் அவரதுஅகவாழ்வு என்று முன்னொரு கட்டுரையில் எழுதி இருந்தேன். இந்த அகவாழ்வு என்பதை ஏதோ ஒரு மனவியல், காரன் மாதிரி மெனியும் நடத்தி மனதின் தன்மையை ஆராய முயன்றிருக்கிறார் என நான் அர்த்தப்படுத்தினதாக ஒருவர் கருதிப் பேசினார். மனசின் தன்மையை, அதாவது அதன் இயந்திரப் பாகங்களை மனவியல்காரர் ஆராய்வதுபோல் ஆராய்தல் அல்ல சுகவாழ்வு. அது உள்ப் பொருள் உணரும் முயற்சியாகும். மௌனியின் கதைகள் அந்க வாழ்வின் பாதையில் நேர்ந்த விளைவுகள். வெறும் 'காதல்' கதைகள் அல்ல. உள்ப் பொருள் நோக்கிச் செய்த இந்த விசாரத்தை அவர், தம்மை நாயகனாகவைத்துச்செய்திருக்கிறார் என்று கொள்வதில் குறையில்லை. 'அழியாச் சுடர்—நினைவுச்சுவடு—எங்கிருந்தோ வந்தான், என்ற மூன்று கதைகளிலும் கதாநாயகர்களை இரண்டாவது பாத்திரமாக நின்று பார்த்து எழுதி இருக்கிறார். இந்த மூன்று கதைகளிலும் தான் கதாநாயகன் வர்ணிக்கப்படுகிறான். அழியாச் சுடரில் கதாநாயகன் மூலமாகவே:

,, 'என் நீண்ட மூக்கு, முகத்திற்கு வெகு முன்பாக நீண்டு முன் செல்பவர்களை திருப்பி இழுப்பதுபோல வளைந்து இருக்கும். அதன்கீழ் மெல்லிய உதடுகள் மிருதுவாகி, பளீரென்ற பல்வரிசைகளை பிறர் கண்கூச சிறிது காண்பிக்கும்...

'நினைவுச் சுவடு' வில் இரண்டாவது பாத்திரவாயிலாக:

" அதே வளைந்த மூக்கு உயர்ந்த புருவம், மிருதுவான கன்னங்கள்... "

'எங்கிருந்தோ வந்தான்'னிலும் அப்படியே :
"மூக்கு நீண்டு வளைந்து இருந்தது.
மெல்லிய உதடுகள் சிறிது விலகி இரு
வரிசைப் பற்களை, கண்கூச, வெளிக்
காட்டின......"

இந்த மூன்று கதைகளில் மட்டுமே கதாநாயக வர்ணனை இருக்கிறது—அவையும் ஒன்றுக்கொன்று ஒற்றுமை கொண்டு; மௌனியைச் சந்தித்ததுமே கொண்ட அதிர்ச்சி இந்த வர்ணனைகளின் உயிர் சொருபத்தைக் கண்ட அதிர்ச்சியாகவேயிருந்தது, மௌனியையும் இதே அவரது வார்த்தைகளில் வர்ணித்துவிடலாம். "மூக்கு, புருவம், உதடுகள், பற்கள் (ஓயாது போடும் வெற்றிலைக் காவியில் மங்கிவிட்டாலும்)" அவரது வர்ணனைகள் தான். அப்படியானால் மௌனியைப்பற்றி சுயசரிதைக் கதைக்காரர் என்ற கூற்று எவ்வளவு பொருந்தும் ? பார்ப்போம் !

அகவாழ்வில் ஈடுபடுபவன் தன்னூடேசெல்பவனே மேலும் தன்னை உடலாக மதிக்கையில் 'அழியாச் சுடர்' கதாநாயகன் மாதிரி " தன் அழகில் தானே ஈடுபட்டு" நிற்கிற ஒரு நிலை வெளிவாழ்வில் இருப்பதை உணர்ந்து அதன் நிச்சய மின்மையை உணர்வதும் அவ்வாழ்வில் தான். மௌனி தம்மை மீறின ஒரு ஆத்மநிலையைத்தான் சோகமயமான. எங்கிருந்தோவந்தான்' கதாநாயகனிடத்திலும் கண்ணிர் வரண்டு சலனமற்று நிற்கும் அவன் கண்கள் திகைப்பும் வருத்தமும் புதைந்து பாழ்பட்ட கேணிபோன்றுதோன்றின. அவன் நம்மை உற்றுநோக்கும்போது அவனது அவனதுபார்வை நம்மைஊடுருவிப் பிய்த்து, அமைதி அற நம் முன் சிலாகைகொண்டு துருவிப் பார்ப்பதுபோன்ற ஒரு உணர்ச்சி—ஓர் உயர்சக்தி நம்முன் நிற்கும் பயம்—இவைதான் நம் மனதை அலைக்கும்" என்ற வர்ணனையில் காட்டியிருக்கிறார். சுயவாழ்விலேயே உண்மையைத்தேடும் சலனமாகக் கலையுள்ளம் இயங்குவது இயல்பு. படைப்புகள் வெளிப்படையாக காட்டாத நிலையிலும் நுட்பமாகக் கலைஞர்களின் வாழக்கை. காரியங்களின் பின்நிற்கும் அர்த்தம் முதலியவற்றைக் கவனிக்க முடிந்தால் இது உணரலாம். உண்மை தேடியின் அனுபவங்களையே 'காதல்' போர்வையுள் வெளியிட்ட மௌனியின் விஷயத்தில் இதுசற்று அழுத்தமானது. எனவேதான் அகவாழ்வின்மூலம் மௌனி உலகுமுழுதுக்கும் பொதுவானதான ஆன்ம வேட்கையை தன்னை நாயகனாக்கி வெளியிட்டிருக்கிறார். தன்னையும் உலகுக்குப் பொதுவாக்கி 'அவன்' என்று குறிப்பிட்டது தான் அவரது பொதுவாழ்வின் தூல முத்திரை. பெரும்பாலும் அந்த 'அவன்' பெயரற்று, ஒரு இடத்துக்கு என்ற உரிமையற்று நிற்கிறான். எனவே தனிமனித முத்திரை யாவற்றையும் துறக்கிறான். மௌனி தன் முத்திரைகள் யாவற்றையுமே துறந்து உலகுக்குப் பொதுவான அநுபவமாக வியாபித்துவிடவே விரும்பினார் என்பதே சரி.

அவரது பாத்திரங்கள் வெறும் 'காதல்' பண்ணியவர்கள் என்றோ, அவற்றின் மூலம் தனி மனிதரீதியாக மௌனி தன்னையே காட்டினார் என்றோசொல்வதுதவறு. 'காதல்' தான் அவரது கதையம்சங்கள் என்றால் அவரது பாத்திரங்கள் ஏன் ஒருவரை விட்டு மற்றவர் நழுவி ஓட வேண்டும் ? அவரது காதலர்களின் குறுக்கே ஏதும் நிற்பதில்லையே ? அப்படியிருந்தும் அவர்கள் ஒருவரை ஒருவர் தழுவிக்கொள்ளும் சந்தர்ப்பங்கள் வந்து காத்து நின்றாலும் ஒருவரிடம் மற்றவர் தம் காதலை வாய்மூலம் சொல்வது கூட இல்லையே. ஏன்? இந்தக் கேள்விகளை எழுப்பிக் கொண்டு படித்தால் தான் மௌனியின் அக உலகுக் கபாடம் திறக்கும்.

மௌனியின் பாத்திரங்கள் தூலமாகச் சேர்ந்துவிடுவதைக் காதலாகக் கொள்ளவில்லை. அதாவது அவர்கள் 'காதலிக்க'வில்லை. அவர்கள் தங்கள்

காதலேயே ஒரு ஆரம்பமாகக் கொள்கிருர்கள். பிறகு எதையோ தேடுகிருர்கள். பாத்திரங்கள் 'ஏன் — எங்கே? என்று கேட்பது கவனிக்கவேண்டும். இந்தக் கேள்வி தன்னைப்பற்றிய பயங்கரமான சந்தேகத்தில் தோன்றும் கேள்வியாகும். ஆத்மவேட்கை இக்கேள்விகளுடனேயே துவங்குகிறது, 'காதல்' என்ற தூலநிலையில் 'எங்கிருந்தோ வந்தான்' கதாநாயகன் கதாநாயகியிடம் ஈடுபடுவதை ''அவன் பக்கத்தில் உட்காருவ''தாகக் காட்டி உடனே கதாநாயகி ஜன்னியில் ''சீ......சீ நீ யார், பத்மா என்கிருயே, ஏ சனியனே என்னே ஏன் பீடித்து இருக்கிருய், நீ போ. என்று வேகத்தோடு திமிருவது போல் உடம்பை நெளித்து முறித்து'' ச் சொல்வதையும் காட்டுகிருர். இங்கே தான் உடலில் பிடித்த காதலின் போலித் தன்மையை உணர்ந்த கதாநாயகன் தேடுதலே ஆரம்பிக்கிருன்.

ஜித்து கிருஷ்ணமூர்த்தி காதலைப்பற்றிச் சொன்னதை இங்கு கவனிக்கவேண்டும். ''நாம் காதல் என்று கொள்வது, மற்றவருக்கும் எமக்குமிடையில் இருக்கும் உறவைப்பற்றி நினேப்பும், அதுக்கும் மேல் போனுல் மற்றவரைப் பற்றி நெகிழ்வோடு நினைப்பதும், தான். மெய்க்காதல் நினைப்பு அல்ல. அது தொடர்பைப்பற்றிய வெளிவுணர்வு.'' இந்த தொடர்பைப் பற்றிய விவகாரத்தைத்தான் மௌனியின் பாத்திரங்கள் செய்கிருர்கள், அதனுலேயே தூலமான சேர்க்கைகளிலோ நினைப்புகளிலோஅவர்கள் புதைந்து விடுவதில்லை.

இப்படி உள்த்தொடர்புக்குக் காரணத்தையும் அதன் அகப்பீடத்தையும் தேடும் கலைஞனின் படைப்புகள் எப்படி தனிமனிதப் போக்கானவையாகும் ? ஆத்ம தேட்டம் உலகின் பொதுவுடலின் சமுத்திரத்தின் தனித் தன்மை என்ற திவலையின் வியக்தியை இழப்பது அல்லவா ?

இனி, மௌனியின் குறியீடுகள் தனி மனிதத் தன்மையானவை என்றது பற்றி. மௌனி காதல் என்ற தமது கதை யாவற்றுக்கும் பொதுவான அம்சத்தையும் ஒரு குறியீடாகக் கொண்டிருக்கிருர் என்ருேம். இந்தக் குறியீடுகூட அவருக்கே உரிய தனிக்குறியீடோ அல்லது அவருக்கு மட்டும் புரியக் கூடிய (குறியீடு தனி மனித ரீதியானது என்ருல் இது தான் பொருள் போலும்) ஒன்ருே அல்ல. எல்லா இந்தியக் கவிகளும் நூற்ருண்டு நூற்ருண்டாக புராணங்களிலும் காவியங்களிலும் ஆத்ம வேட்கைக்காக உபயோகித்து வந்ததே இது. பராசக்தி இமவான் மகளாகப் பிறந்து ஈசனைக் 'காதலிக்க' வில்லையா? ஆண்டாளும் மீராவும் கண்ணனைக் 'காதலிக்க'வில்லையா? அங்கெல்லாம் காதல் உலகினரின் பொருளை மீறினதாக ஆன்மவேட்கையாக—பரம் பொருளுடன் கலக்கும் இச்சையாகத்தான் எழுப்பப்பட்டிருக்கிறது.

கதைகளில் துகள்களாக நிற்கும் குறியீடுகளைப்பற்றியும் இப்படித்தான். 'மாறுதல்' தான் மௌனியின் குறியீட்டுக் கலைநுட்பத்தின் சிகரப் படைப்பு அதில் வரும் பதனிக் 'குடம்' எந்த ஹிந்துவுக்கும் எளிதில் புலனுகும் குறியீடுதான். நந்தவனத்து ஆண்டிப்பாட்டில் குயவன் என்ற கடவுள் கொடுத்த தோண்டி (குடம்) யைப்பற்றி அறியாதவர்கள் யார்? அதே 'மாறுதல்' கதையில் படூடோபத்தின் குறியீடாக நிற்கும் சிங்கப்பூர்க்காரனிடத்தில் பொதுத் தன்மைக்கு விரியாத அம்சம் என்ன? அது பச்சையாகவே அழிய நிற்கும் தோற்றத்தின் போலியழகைக் காட்டுகிறது. ஆசிரியரே பாத்திரவாயிலாகப் பேசியும் அதை வெளிப்படுத்துகிருர். மேலும் விதிவசப்பட்டுச்செல்லும் மனித வாழ்வை நாம் பேச்சிலேயே உபயோகிக்கும் 'செம்மறியாட்டுப் போக்கு' என்ற மரபுத் தொடரில் காட்டுகிறமாதிரித்தானே மௌனி 'மாறுதல்' லில் வரும் ஆட்டிலும் ஏற்றிக் காட்டுகிருர். அந்தக் கட்டை வண்டி, நடுவில் தெரியும் 'அவன்' எல்லாம் பாரத்தை'—உடல் பாரத்தைச் செலுத்தும் 'அவன்' ஞக நாம் திண்ணைப் பேச்சுகளிலேயே கேட்க முடியும்.

இதற்கும் மேலாக இன்னெரு அபூர்வமான குறியீட்டை மௌனி உபயோகிக்கிருர் தமது பெரும்பாலான கதைகளில்—சங்கீதம், ஒரு தடவை சிதம்பரம் பிராகாரத்தில் க. நா சு. வோடு செல்லும்போது தமது சங்கீத ரஸனையை தமது அபிமானத்துக்கு உட்பட்ட ஒரு வயலின்கார நண்பருக்குப் பிறகு யாரும் திருப்திப்படுத்த முடியாது என்று நினைத்து அவர் காலமானதிலிருந்து தாம் சங்கீதம் கேட்கிறதை நிறுத்திவிட்டதாகக் கூறியிருந்ததை நினைப்பு மூட்டி, அப்போது ஒலிபெருக்கியில் கேட்கும் இசைக்குத் தப்பமுடியாது போனதுக்கு, ''மனிதன் தன் பேரைச் சொன்னதும் ஒரு காலத்தில் கடவுள் முன் மனிதன் கடவுளை கோயிலுக்குள் பூட்டிவிட்டான். வெளியில் சங்கீதமாக வியாபித்துவிட்டான்'' என்ருர். (மௌனி சொன்ன இதை வைத்து க. நா. சு. 'சங்கீதப் போராட்டம்' என்ரெரு கதை எழுதியிருக்கிருர்.) அவரது இந்தப் பேச்சிலிருந்தே சங்கீதத்தை ஒரு வியாபகத்தின் குறியீடாக அவர் கொண்டிருக்கிருர் எனக் காணலாம். 'பிரபஞ்ச கானம்' மில் கதாநாயகியுள் அடங்கிய சங்கீதம் வெளி வியாபகம் கொண்டு உலகை நிரப்பி, இயற்கையின் குறைபாட்டையே நிரப்பியதை உள்ளோட்டமாகப் பார்த்தால், பரம்பொருள் ஜீவாத்மாவின் கலப்பில் புதுமை பெறுகிறது என்ற அற்புதமான உள்பொருளை உணரலாம். சங்கீதத்தின் வியாபகத் தன்மையும் அது அளிக்கும் இன்பமும் இரண்டற நிற்பவை. ஆத்மாவின் தன்மையுடன் இதை ஒப்பு நோக்கி, மௌனி சங்கீதத்தை கொணரும் கதைகளைப் படிப்பது நல்லது. சங்கீதத்தின் தன்மையையும் சரிவர உணர்ந்து, அதை ஆத்மாவின் குறியீடாக்கும்போது அவர் துணைக்கு எழுப்பும் வசனங்களையும் கவனிக்கவேண்டும். 'நினைவுச் சுழல்'லில் சேர்ந்து கச்சேரி வாசிக்கையில் கதாநாயகனும் கதாநாயகியும் ஒன்ருவதை மௌனி,

''அறியாது பந்தம் இறுகிக்கொண்டது. கண்டு கொள்ளாத வகையில் நிரடான முடிச்சாகத்தான் இருந்தது...கருணையையும் கடந்த உணர்ச்சியற்ற சிரிப்பைத் தான் ஒலித்தது அந்நாதம்.''

என்று கூறுவது பாத்திரங்களின் உள்பொருள்கள் நாதம் என்னும் பெருவெள்ளத்தில் திவலைகளாகி இணைவதையே காட்டுகிறது, நினைவுச் சுழல் பாத்திரங்களுக்கு மட்டும்தான் அந்தச் சங்கீதத்தின் மூலம் இணையும் வாய்ப்புக் கிடைத்தது. அவர்களும் உடல்ரீதியாக இணையவில்லை. பிரிந்து எதிர்த்திசைகளுக்கு ஓடிவிடுகிருர்கள்.

இத்த சங்கீதம் என்ற குறியீடுகூட மௌனியின் தனிமனிதத்துவத்துக்கு உரியது அல்ல. எல்லா ஹிந்துக்களுக்கும் ஆதிப்பொருள் நாதவடிவானது என்பது தெரிந்ததுதான். ஆகவே மௌனியை அவரது கலைக்காகவும் சரி குறியீட்டுக்காகவும் சரி தனி மனிதப் பார்வைக்காரர் என்பது தவறு. அவர் உலகுக்கு உரியவர். அவர் பார்வை மனிதனின் மிக உன்னதமான வேட்கையை உயிராகக்கொண்டது. இதை எவ்வளவு விரைவில் தமிழர்கள் உணர்கிறார்களோ அவ்வளவுக்கு அவர்கள் முனைந்து பிற இந்திய மொழிகளுக்கும் உலகுக்கும் இந்த அபூர்வ கலைஞனை உடைமையாக்கலாம். மௌனியின் கலையுடலின் வியாபகம் அதற்கு இணங்குகிறது.

தனி மனிதத்தன்மை யுள்ளதாயும், பிறருக்கு அவ்வளவு லாபம் காட்டாததாயும் உள்ள தூல அனுபவங்களைக் கொண்டே பொதுவாழ்வை உள்க் குரலாக்கிப் படைப்பதுக்கும் அதாவது ஆசிரியரின் சுய சரிதைப் போக்கான விஷய அம்சம் படைப்பில் இருப்பதுக்கும் கூட முகஞ்சுளிப்பது நல்ல வாசக அம்சமாகாது. ஏனெனில் கலைத்தர்த்தை கதையிலுள்ள ஆசிரியனின் சுய வாழ்வு (பிரைவஸி) பாதிக்காது. கலைத்தரத்தின் உயர்வு தாழ்வுக்கு அவனது மேதையே காரணம். மௌனி விஷயம் இதைவிட சூட்சுமமானது. தூலமாகக் காதல் உலகைக் காட்டி சூட்சுமமாக இன்னொரு உலகையும் அவர் காட்டினார். எனவே இரண்டு வாழ்வுகளுக்கு அவர் காரணமாகிறார். இந்த இரண்டு வாழ்வுகளுள் அவரது கலையின் உத்தேச வேகம் வாசகனை ஈர்ப்பது அவரின் அகவாழ்வை நோக்கியே. ஆகவே, அந்த அகவாழ்வோடுதான் அவரது சுயவாழ்வைப் பின்னிப் பார்க்கலாம். கலைக்குப் பொய் ஒரு சாக்கு, பொய்யாக கற்பனை மூலம் ஒரு பிடிகயிறைக் குருட்டு வாசகனிடம் கொடுத்து, அவன் உண்மை மயமான கலையனுபவத்துள் ஈர்ப்பதுதான் கலைத்துறையின் தந்திரம். எனவே ஆசிரியரின் கலையை ஊடுருவிப் பார்த்து அவரது படைப்பின் வெளித்தோற்றத்துக்கும் உள்ளே நிற்கும் ஆத்மாவை உணர்வதே நல்ல ரஸனை. வெளித்தோற்றமாகக் கற்பனை மூலம் எழும்பும் பொய்யான பிடிகயிறாக நிற்கும் மௌனியின் காதல் உலகையே அவரது அனுபவமாகக் கொள்வது வாசகக் கோளாறினால்தான். இப்படிச் சொல்ல நேர்ந்தது ஏனெனில் காதல்போன்ற அனுபவங்களை ஒருவன் உலகினரிடையே சமர்ப்பிக்கும்போது அத்தகைய அனுபவத்திற்கு லோகாயதத் தன்மை இருப்பதால் ஆசிரியரை அதற்காகச் சந்தேகிப்பது அவரது மென்மையைப் பாதிப்பதாகும். மௌனி விஷயத்தில் அவரது உன்னத அனுபவத்தின் காரணத்தையே உணராமல் இப்படிச் சந்தேகம் கொள்வது விமர்சனத்தில் சுயரகசியத்தைத் தொடுவது பற்றிய நாகரீகத்தை மீறும் குற்றத்தைவிட ஆசிரியரின் கலையையே சரிவர உணராது அநீதி செய்ததாகும்.

''ஆனால் அகவாழ்வு போன்ற உன்னத அனுபவங்களை ஆசிரியன் சமர்ப்பிக்கும்போதோ அவனது சுய வாழ்வைப் பின்னிப் பார்ப்பது கலைஞனின் வியக்திக்கு பெருமையே அளிப்பதாகும். பாரதியின் கலையோடு புழங்குபவன் அவரது வாழ்வை நினைவுகொள்ளும் போதுதான் இன்று தம் அனுபவங்களுக்குப் புறம்பானவற்றை பாரதி கவிதைகளைப் பின்பற்றும் சாக்கில் எழுதிப் பொய்ப் படைப்பு செய்வோரின் குற்றம் தெரியும்.

''எனவே மௌனியின் படைப்பினுள் உள்ளோடி நிற்கும் அகவாழ்வும் அவர் தம்மை நாயகனாக்கித் தீற்றினவை என்று குறிப்பிட வந்தாலும் அது மௌனியின் தனித்தன்மையான உலகை பிறர் இமிட்டேட் பண்ணுவதற்கு எச்சரிக்கையாக்கினதாகவே இருக்கும். 'காதல்' போன்ற லோகாயத அனுபவங்களைவைத்து எழுதும் கலைஞர்களைப்பற்றி இக்கோளாறு இல்லை, ஏனெனில் அவர்களது அனுபவங்கள் கற்பனைக்கும் சாதாரண உள்ளங்களின் அனுபவங்களின் அனுபவத்துக்கும் எட்டக்கூடியவை. மௌனி, அவரோடு ஒப்பிட்டு 'அக உலகக் கலைஞர்'களில் பரிசீலிக்கப்பட்ட லா. ச. ராமாமிருதம் போன்றோரின் அகவாழ்வு கற்பனைக்கு எட்டாதது ஏனெனில் லோகாயதமான தூல அனுபவங்களுக்கு இருக்கும் தூலமான பொதுத்தன்மை அவற்றுக்கு இல்லை. அப்படிப் பொதுத் தன்மை வெளிப்பட இல்லாவிட்டாலும் அகவாழ்வு மனிதர்களிடையே நேரும்போதெல்லாம் அது ஒற்றை மனிதனின் அடையாளங்களைக் கீறிக்கொண்டு அவனுள்ளேயே சென்று எல்லாரிடத்தும் எல்லாத்தினிடத்தும் ஊடுருவி நிற்கும் ஒற்றுமையை அவனுக்குள்ளே, அவனை ஏதுவாக்கி, உணர்வதாகும், அதை உணரும் பாதையில் நேர்பவை தான் மனித குலத்தின் மிக உன்னதமான பிரச்னைகளாகும். பொருளாதார, அரசியல், சமூகப் பிரச்சினைகள், ஏன் பூத உலகின் எல்லாக் கேள்விகளுக்குமே சரியான பதில் அகத்துள் நிற்கிறது. அதுதான் ஒரே ஒரு ஒற்றை பதில். அதில்தான் பொதுவாழ்வின் பூரண பிரக்ஞை குடிகொண்டிருக்கிறது. அதை நோக்கிச் செல்பவனின் அனுபவங்களை இன்னொருவன் 'இமிட்டேட்' பண்ணிவிட முடியாது. ஏனெனில் அனுபவிப்பவனின் தனியுள்ளத்தினூடே அவனது முத்திரை பதிந்த அனுபவப்பாதையிலேயே அவ்வனுபவங்கள் நேர்கின்றன.''

கலையின் பொது வாழ்வு வியாபகத்திலும் கலைஞனின் தனித் தன்மை தெரிவதுதான் கலையைப்பற்றிய விமர்சனங்கள் யாவற்றையும் திணறடிக்கும் அம்சம். பேருயிரும் சிற்றுயிரும்போல பொது உலக உள்ளத்தில் நிழலாக நிற்பதுதான் கலைஞனின் வியக்தி. கடோபநிஷத்தில் சொல்வதுபோல் பேருயிரென்னும் வெய்யிலில் நிற்கும் நிழலே சிற்றுயிராகிறது, சிற்றுயிருக்கும் நிழலைப்போலவே அடையாளங்கள் பிறக்கின்றன. கலைஞனின் தனிமனித வியக்தியின் அடையாளங்களும் அவனது அடையாளமற்ற பொதுவாழ்வு வெய்யிலில் விழவே செய்யும். வெய்யிலை மறைத்து நிற்கும் (மாயை) தோற்றம் நீங்கியதும் நிழல் வெய்யிலோடு இரண்டறக் கலந்துவிடுவதுபோலவே, கலைஞனின் தனிமனித அம்சங்களுக்குக் காரணமான தூலத்தன்மைகளை நீக்கிப் பார்க்கும்போதுதான் அவனது பேருடல் புலப்படும், அதுதான் உள்ளத்தை பேருணர்வுக்கு உயர்த்தும் கலா அனுபவத்துக்கே வழியாகும்.

கோலன் (:) நிறுத்தக் குறியின்
புது உபயோகம்

க (ka)	—	: க (Gha)
ச-வுக்கு	—	: ஜ இருக்கிறது
ட (Ta)	—	: ட (Da)
த (Tha)	—	; த (Dha)
ப (Pa)	—	: ப (Bha)

சி, டே லீவிஸ் கண்ட இலக்கியத் தத்துவம்

ரா. ஸ்ரீ. தேசிகன்

சிசில் டே லூவிஸ் ஆங்கில நாட்டு நவீன சிறந்த கவிஞர்களில் ஒருவர். 1934–ஆம் ஆண்டு கவிதைக்கு வாழ்வுண்டு (A Hope For Poetry) என்ற அரிய நூலை வெளியிட்டுள்ளார். நவீன கவிஞர்களான ஆடன், டி.எஸ். எலியட் முதலியவர்களுடைய கவிதைகளின் இயல்புகளையும் தன்மைகளையும் நுணுக்கமாய் ஆராய்ந்திருக்கிருர். விஞ்ஞானம் வளர்த்தால், கவிதை தேய்ந்து மறைந்துவிடும் என்ற கொள்கையில் இவருக்கு நம்பிக்கை இல்லை. விஞ்ஞானம் தருகின்ற கருத்துக்களையே கவிதைக்கும் பொருளாக்கிவிடலாம் என்பது சிந்திப்பதற்குரியது. சான்ருக: மின்சார விளக்குகளை வைத்துக்கொண்டு வேதாந்த கருத்தை விளக்க என்ஞல் முடிந்தது. மின்சார சக்தியை எங்கேயோ ஓரிடத்தில் உண்டுபண்ணுகிருர்கள், அந்தச் சக்தி விளக்குகளில் பாய்கின்றது. விளக்குகள் அந்தச் சக்தியைத் தம் சக்தி என்று சொல்லிக்கொள்ள இயலுமோ, ஒரு கணத்தில் பல்லாயிரக்கணக்கான விளக்குகள் அவிந்துவிடுகின்றன; மீண்டும் அவைகள் ஒளியைப் பெறுகின்றன. அதைப்போல நம்மிடையே திகழ்கின்ற சக்திகள் யாவும் ஆண்டவனிடத்திலிருந்து அருவிபாய்கின்றன. அத்தகைய சக்திகளை நம்முடையவை என்று சொல்லுவதற்கு இயலுமோ? நாம் அச் சக்திகளை—நமக்கில்லாத சக்திகளை—நம் சக்திகள் என்று கருதினேமாஞல் நாம் கள்வர்கள் என்பதில் யாதொரு ஐயமில்லை.

நம்முடைய அகவுயிர் கூட நமக்குரியதில்லை என்ற கருத்தை மிகக் கவின்பெற நம்மாழ்வார் நமக்குச் சித்திரித்துக் காட்டியிருக்கிருர்.

என் உள்ளத்தில் நீ வந்து உறைகின்ருயே உனக்கு என்ன கைம்மாறு தருகின்றது? என் ஆவியை உனக்குத் தருகின்றேன் என்று அவர் கூறுகின்ருர். சட்டென மற்ரெரு கருத்து அவர் உள்ளத்தில் மின்னலடிக்கின்றது. எனக்கொரு ஆன்மா உண்டா? அதுவும் உன்னுடையதே என்று மொழிகின்ருர்.

> ''எனதாவியுள் கலந்த பெருநல்லுதவிக் கைம்மாறு
> எனதாவி தந்தொழிந்தேன் இனி மீள்வதென்ப துண்டோ?
> எனதாவியும் நீ பொழிலெழு முண்ட எந்தாய்
> எனதாவியார்? யான் ஆர்? தந்த நீ கொண்டாக் கினையே''

நாம் மொழிகின்ற சொற்கள், நாம் புரிகின்ற செயல்கள் ஒன்றும் அழிந்துவிடுகிறதில்லை. கழிந்த காலச் செயல்களின் தன்மைக்கு நிகழ்காலத்திலே நோக்குகின்ருேம். நிகழ்காலச் செயல்கள் வருங் காலத்தை உருவாக்குகின்றன. இசைத்தட்டு நமக்கு ஓர் உண்மையைப் புலப்படுத்துகின்றது. இதை வைத்தே நான் ஒரு கவி புனைந்துள்ளேன். பாடப் படுகின்ற பாடல்கள சிறைப்படுகின்றன. அதைப்போல ஆண்டவனுடைய அகண்டமான இசைத்தட்டில் நம் சொற்களும் செயல்களும் சிறைப்படலாம். அந்த இசைத் தட்டை அவன் திருப்பிவிட்டால்' நாம் புரிந்தன யாவும் வெளிவருமல்லவா?

> ''பழுத்த நிலவு படரும் மாடம்;
> தெய்வ அமைதி திரளும் வேளை;
> மிளிரும் பல்கலன் மிடுக்குடன் பூண்டு
> புன்னகை புரியும் பூவிள மங்கையர்
> பூமிசை சுரும்பினம் போலவே மொய்த்தனர்
> இசையின் வெள்ளம் இன்புறப் பருகவே
> இசைதுயில் தட்டை எழுப்பவே
> சுழற்றினர் வனிதையர் சுந்தரக் கரங்களால்
> பண்டே மாண்ட பாடகர் நல்லிசை
> விழித்தே யெழுந்தது யாவரும் வியக்கவே
> கிளரொளி மங்கையர் கீதவெள்ளம்
> குடித்துக் குடித்துக் கொண்டனர் பெருமிதம்

நானே,

> பழுத்த நிலவின் வனப்பைப் பருகேன்;
> அமைதி நல்கும் அழகை அருந்தேன்
> பல்கலன் பூண்ட பாவையர் நோக்கேன்''
> அச்சம் பிறந்ததே அகமனந் தன்னில்
> ஆண்டவன் அளப்பரும் அகண்டமாம் தட்டில்
> சிறைபடும் தீச்செயல் சிந்தையில் விழிக்கவே
> யாதோ உரைப்பன்? யாதோ இயம்புவன்?
> எப்படி நிற்பன்? எப்படி அமர்வன்?
> அறஞ்சேர் ஆண்டவன் சந்நிதி அண்மையில்
> என்ற குரலும் எழுந்ததே என்முன்''

ஆனல்,

> அக்குரல் மாய்ந்தது ஆன்ரேர் மொழியில்
> ''கங்கு கரையிலாக் காலம் போலவே
> விரிந்த விசும்பின் பரந்த பாழில்
> அண்டங்கோடி துரும்பென ஆட்டும்
> சொற்பதங் கடந்த சுந்தரக் கடவுளும்
> தன்வலி இழப்பன் தரணியில் தாழ்ந்தே
> அஞ்சலி செய்யும் அடியார் முன்பே
> எல்லாம் நோக்கும் இறைவன் கண்களும்
> அவர்தம் குற்றம் அறியுமோ சொல்லீர்
> என்றே இயம்பினர் பண்டைச் சான்ரேர்
> அம்மொழி புந்தியிற் பாயவே அகன்றது
> குடிகொள் அச்சமும் குணத்தனன் நானே

சான்றுகளை அடுக்கிக்கொண்டே போகலாம். விஞ்ஞானம் வளர்ச்சியால் கவிதையின் குரல் அவிந்து போய்விடாது: விஞ்ஞானம் புரிந்த செயல்களின் வாயிலாகக் கவிதையின் அமரக்குரல் கேட்கலாம் என்று முடிவுக்கு நாம் வந்துவிட்டோம். கவிதையின் குரல் எந்தக் காலத்திதும், எந்த நாட்டிலும் முரலும் என்பது உண்மையே

லிவிஸ் நம் நாட்டுக் கவிதையின் வரலாற்றைக் கவிதை நயம்படச் சித்திரிக்கிறார். டிரைடன், போப் முதலியோர்கள் கவிதையை ஓர் ஒழுங்குக்கு—யாப்பிலக்கண வரம்பிற்குக் கொணர்ந்தனர். வெறும் ஒழுங்கும் மட்டும் போதுமா? பிளேக் சாதாரண மக்கள் உணர முடியாத ஒரு தெய்வத்திற்குக் கோயில் அமைந்தார். இயற்கைக் காட்சிகளில் ஒரு தெய்வக் குரலை வேட்ஸ்வொர்த் கேட்டார்; கோலிரிஜ் ஓர் அமானுஷ்ய உலகத்தில் திரிந்தார். கீட்ஸ் தம் வனப்பு வையகத்தில் வாழ்க்கைக் கசப்பை மறந்து வாழ்ந்தார். மாத்யூ ஆர்னால்ட் சமயம் நமக்கு ஆறுதல் அளிக்காது கவிதைதான் நம் ஆன்மாக்களைக் காப்பாற்றும் என்று முழக்கஞ் செய்தார். ஏ. இ. ஹௌஸ்மன் கவிதையில் ஒரு புதிய இசையை எழுப்பினார்; ஹாப்க்கின்ஸ் யாவரும் அறியாத படி ஒரு புதிய நாட்டிற்கு நம்மை அழைத்துச் சென்றார்.

ஹார்டி, டி லா மேர் தோன்றினாலும் கவிதை உலகத்தில் ஓர் அயர்வையும் சோர்வையும் நாம் பார்க்கின்றோம். நாகரிகம் தளர்ச்சி அடைந்து வலி குன்றிவிட்டது; அது ஒரு பாழாய்க் காட்சி அளிக்கின்றது என்பதைத் தம் 'பாழ்நிலம்' (Waste Land) என்ற கவிதையில் டி. எஸ். எலியட் நமக்கு நன்கு காட்டியுள்ளார். டைலன் தாமஸ், இஸ்டீபன் இஸ்பெண்டர் ஆடன், மாக்நீஸ் முதலியவர்கள் கவிதைக்கு வாழ்வுண்டு என்று உலகங் கேட்க முரசடித்து விட்டனர். அவர்கள் புனைந்த க்விதைகள்—அமர முத்திரை பெற்ற அவர்கள் கவிதைகளே கவிதைக்கு வருங்கால வாழ்வு உண்டு என்றதை முரசடித்துவிட்டன.

கலப்பற்ற அகத்துறைப் பாக்களுக்கு நவீன நாகரிகத்தில் இடமில்லை என்று இவ்வாசிரியர் இயம்புகின்றார். இது உண்மைதான். நாகரிகம் மிகச் சிக்கலாய்ப் போய்விட்டது. இந்தச் சூழ்நிலையில் கலை ஏன் கலப்பற்ற அகத்துறைப் பாக்களை அமைப்பது இயலாது? கலப்பற்ற கவிதையைப் பற்றி (Pure Poetry) ஆசிரியர் தரும் கருத்துக்கள் நம் அறிவைத் தூண்டாமற் போகா. வாழ்க்கையைப் பற்றி அக் கவிதை ஒன்றுமே கூறக்கூடாது. 'Ah, sunflower weary of Time'. இந்த வரிக்கு எத்தனை உரைகள் அமைத்துத்தந்தாலும், இதில் அடங்கியிருக்கிற பொருட் செறிவை நாம் சித்திரிக்கக் கூடுமோ. உரைநடையில் இதன் பொருளை நாம் கொணர முயன்றால், அம் முயற்சி வீணே.

'Ripness is all' என்ற தொடரவிலும் ஆழ்ந்த கருத்து கோயில் கொண்டிருக்கிறது. வாழ்க்கையை இது விமர்சனஞ் செய்கிறது. உணர்ச்சிக்குப் புறம்பாயுள்ள எந்தக் கருத்து நுழைந்தாலும் அது கலப்பற்ற கவிதையாகாது என்ற இலக்கணத்தை வகுத்துக் கொண்டு இவ்வரியைக் கலப்பற்ற கவிதையாகாது என்று தள்ளிவிடலாம்.

கலப்பற்ற கவிதைதான் கவிதையாகும், மற்றவை கவிதைகள் அல்ல என்று நாம் கூறுவோமானால், நம்முடைய இலக்கணம் குறுகிய இலக்கணமாய் அமைந்து விடக் கூடும். கவிதையின் பயனும், திறன் ஆய்வின் பிரயோஜனமும் The use of Poetry and the use of 'Critlcism' என்ற நூலில் டி. எஸ். மொழிந்தவை சிந்திப்பதற்குரியவை.

'சில கவிதைகள்' படிப்போர்களுள் சிலரை இன்புறச் செய்கின்றன. ஆனால் சில கவிஞர்கள் வேறு விதமாய்க் கருதுகின்றனர். நம்மைப் போலவே மற்றவர்களும் சிந்திக்கின்றனர். ஆதலால் கவிதையின் பொருளைப் பற்றி நாம் கவனிக்க வேண்டியதில்லை. பொருளில்லாமலேயே கவிதை எழுதுவோம். அப்பொழுது கவிதையில் ஒரு செறிவு ஏற்படும் இப்படி எழுதுபவர்களோடு நமக்கோர் உறவு இருந்தால் போதும் இப்படி நினைக்கிறவர்களுடைய நோக்கம் ஒரு லட்சியமாக நான் கருதவில்லை. நம்மில் எப்படி எழுதக் கூடுமோ அப்படி எழுதுவோம்; அப்படி வருகின்ற கவிதையை நாம் ஏற்றுக்கொள்ளுவோம்.

இவ்வுலகம் கயவர்கள் கையில் சிக்குண்டுவிட்டது. இது நம்மைப் பேணாது. இதன் பைத்தியத்தை நாம் அகற்ற முடியாது. இதன்மீது நம் வெம்பழியைத் தீர்ந்துக்கொள்ள வேண்டும். இதற்குப் புரியா கவிதைகளைப் புனைந்து இதைத் திடுக்குறச் செய்யவேண்டும் என்று டிரிஸ்டன் இட்சாரா (Tristran Tzara) 1936ல் டாடாக் கழகத்தை (Dadaist Cult) நிறுவினார். சம்பிரதாயத்தை உடைத்தெறிய வேண்டும். விளக்குகிறதெல்லாம் பத்திரிகை இனத்தைச் சார்ந்ததாகும், விளங்காதவைதான் உண்மைக் கவிதைகளாகும். (Any work of art that can be understood is the work of a journalist)

மேலும் கலை என்பது சமுதாயத்தைச் சார்ந்ததன்று. அது தனித்த மனிதனைப் பற்றியதாகும் என்ற பல்லவியைப் பரப்பினார்கள். 'Art is a private matter the artist does it for himself)

கலைமூலம் கவிஞன் தன்னுடைய வேதனையைக் கொட்டி ஆற்றிக்கொள்ளுகிறான். அதனால் அவன் உள் அமைதியைப் பெறுகின்றான். உண்மைதான். மேலும் பைத்தியம் பிடித்தவர்கள கவிதை எழுதுகின்றார்கள் என்றால் பைத்தியந்தான் கவிதைக்கு மூலம்; அது அவசியம் வேண்டுமென்று சொல்லுவார்களா? உலகத்திற்கு உரைப்பதற்காக நான் கவிதை எழுதவில்லை; எனக்காகவே நான் கவிதை எழுதிக்கொள்ளுகிறேன் என்பது தவறாகும். கலைஞன் வழங்குகின்ற சொற்கள் சமுதாயம் தந்த சொற்கள்தானே. இவன் சமுதாயத்தை விட்டுத் தனித்து நிற்கவில்லையே சமுதாயத்திலிருந்து சில நன்மைகளும் பெற்றபின் சமுதாயத்திற்கு இவன் கடமைப்பட்டிருக்கிறான் என்பதும் உண்மையே. இதிலிருந்து இவன் விலகுவானால், பூர்ண நிலையை இவன் அடைய முடியாது; இவன் தன்னை முடமாக்கிக்கொண்ட செய்தியாய்விடும். ஆதலால் தான் இன்புறுகிறதை வையகமும் இன்புற வேண்டுமென்ற கருத்தோடு இவன் கவிதைகளும் படைத்தே தீரவேண்டும் தனிக் கவிதை—கலப்பற்ற கவிதை—உலகத்திற்குப் புரியாத கவிதை—இதெல்லாம் ஒரு வெறுங்கதை என்று ஆசிரியர் கருதுகின்றார். கவிதையின் பயன்களை நாம் அறியக் கூடும். கவிதையின் இயப்பும், கவிஞனுடைய தன்மையும் சொற்களில் சிறைபடா. ஓர் உருவற்ற ஆனந்தம் நம்முன் சிறகெடுத்துப் பறந்து சென்றால், அதை நாம் பிடிக்க முடியுமோ? பல வர்ணங்களை எடுத்து அது செல்லுகின்ற நிலையில் அதை இத்தகையது என்று

இயம்புவதற்கியலாது. அதைப்போல கவிதை இருக்கிறது. அது புரிகின்ற செயலை நாம் ஒருவாறு உணர முடியும். அதன் செயல் மனிதர்களுக்குள்ளே வேறுபடும் என்பதில் சந்தேகமில்லை.

எமிலி டிக்கின்சன் என்ற அமெரிக்க நாட்டுக் கவிதை ஆசிரியை மொழிகின்றது நோக்குவதற்குரியது.

'ஒரு புத்தகம் படிக்கும்பொழுது என் உடல் முழுவதும் சில்லிட்டுப் போய்விட்டால்—எந்த அனலும் அதை மாற்ற முடியாதபடி சில்லிட்டுப் போய்விட்டால், அதை நான் உண்மையான கவிதைகள் அடங்கிய புத்தகமென்று கூறுவேன். மேலும் என் சென்னியே அகன்று விட்டதுபோல நான் உணர்கிறேன்.

'நான் க்ஷவரம் செய்து கொள்ளுகிறபொழுது, ஏதாவது சில வரிகள் என் மனத்தில் எழுந்தால் என் மயிர்கள் நெட்டு நிற்கும் என்றால் க்ஷவரஞ் செய்து கொள்ள முடியாது. இத்தகைய உணர்ச்சிகள் எழுப்பக் கூடியவையே, உண்மையான கவிதைகள் என்று ஹௌஸ்மன் கருதுகின்றார்.

கவிஞனுக்கு வந்த உணர்ச்சி வெள்ளத்தின் வேகத்தை நாமும் பெறுகின்றோம். கவிஞன் தன்னுடைய அனுபவத்தை அப்படியே தருகிறதில்லை. அவன் இசைக்கின்ற பாட்டின் ஓசை நயத்தின் மூலத்தாலும், சொற்கோப்பாலும் (tone and rhythm) நாம் அவனுடைய செறிந்த அனுபவத்தை நுகர்கின்றோம். கவிஞன் தன்னுடைய உலகத்தில் நிகழக்கூடியதைத் தருகின்றான். கம்பி இல்லாத ஒரு செய்திக்கூடத்தைச் சிந்தித்துப் பாருங்கள். விண்ணை அளாவி இரும்புத் தூண்கள் நிற்கின்றன. விண்ணில் உலாவுகின்ற ஒலி அலிகளை அவை சிறை செய்கின்றன. அவ்வொலிகளை நாம் அடையும்படி செய்யக்கூடிய ஆயுதங்கள் கீழே அமைக்கப்பட்டிருக்கின்றன. நாம் யாருக்கு செய்தி அனுப்ப முடியும், டையலைத் திருப்பினால் நம்முடைய காரியம் முடிவடையும்.

கவிஞனும் இத்தகைய தொழிலைச் செய்கின்றான். இவன் தன் வையகத்தை உற்றுக் கேட்கின்றான். இவனுடைய ஐம்பொறிகள்தான் இவனுக்கு அனுபவங்களைத் தரக்கூடிய கருவிகளாய் இருக்கின்றன. இவனுடைய கற்பனைக் குழாயில் இவ்வனுபவங்கள் பாய்கின்றன. அப்பொழுது உண்மைக் கவிதையின் ஒலி கேட்கின்றது. அது வெளியே வருகின்றது. எத்தனைக் கெத்தனை இந்த குழாய் நீண்டிருக்கிறதோ அத்தனைக் கத்தனை அவனுடைய பெருமை திகழும் என்பதில் ஐயமில்லை. இந்தக் கற்பனையில் பிறக்கின்றதற்குத் தக்க உருக்கொடுக்கின்றான் கவிஞன். இதற்குத்தான் கவிஞனுடைய தொழில்முறையாகும் (Techn'que) அனுபவம் கற்பனையில் பாய்ந்து ஒரு கவிதையாய் உருவடைகின்றது. கற்பனையின் சிறப்பை ஒட்டி நிற்கும் கவிதையும் என்று கூறிவிடலாம். விஞ்ஞானம் தந்த கருவியை வைத்துக்கொண்டு எப்படிக் கவிதையின் பிறப்பைச் சித்திரிக்கிறார் பாருங்கள். இதனால் விஞ்ஞானம் இலக்கியத்தின் குறுக்கே நிற்காது என்ற உண்மையை அறிகின்றோமன்றோ.

இந்தச் சக்தி எல்லோரிடமும் இருக்கின்றது. இதைப் பயன்படுத்திக் கொள்ளுகிறவர்களைக் கவிஞர்கள் என்று அழைக்கிறோம். நாம் கவிதை இன்பத்தை நுகர்கின்ற காரணத்தாலே, நாமும் மலராத கவிஞர்கள் என்று தடையின்றிச் சொல்லலாம்.

கவிஞன் நமக்கு இன்பத்தை அளிக்கின்றான். இது தான் கவி புரிகின்ற செயலாகும். அவனுடைய அனுபவத்தில் நாம் கலந்துகொள்கிறோம். நம்மிடையே துயின்றுகொண்டிருக்கிற கவிதைக் கனல் விழிக்கின்றது. அது போதாதா? கவிஞன் கண்ணோடு நோக்கினால் காணுதவெல்லாம் காணலாமன்றோ? கேட்காதனவெல்லாம் கேட்கலாமன்றோ? இத்தகைய புனிதத் தொழிலைச் செய்யும் கவிகள் மறைந்துபோகவில்லை. அவர்கள் எக்காலத்திலும் தோன்றுவார்கள். கவிதைக்கு வாழ்வுண்டு, வாழ்வுண்டு என்று நாம் முரசடிக்கலாம்

அரை சாண்

வயிற்றை அடைகாக்கும் சிறுவினையால்,
மனப்பெட்டை தலைநீட்டித் தவ்வித்
தெருத்தெருவாய்ப் புதுச்சிறகு விலைபேச,
விலையோ விண்ணேறக்

'கண்ணை' யடகுவைத்துக் கடன் சொல்லிப்
பிஞ்சுவயிற்றில் பால்நனைக்க—

காலத்தின், மெய்தவறிப்
பாலும் கலப்படமாய்க்
குட்டி கோட்டானாய், குதிராகப் பிளவெடுத்து
வட்டி முதலைத் தின்ன, இறக்கை யேலம் பிடுங்க

உள்ளுக்கும் புறத்துக்கும்
அல்லாடும் நொண்டிப் பயணத்தை
வாழ்க்கையென்று முனகும் மனம்—

நொண்டி மனப் பேச்சிற்கு
நூறு கிழம் தலையசைத்தால்
வாழ்வைத் திண்டியறை யாக்குதற்கோ
பிறவி??...

சோற்றுக்குள் சொக்கி முகம் புதைத்தால்
சாவுக்குள் உயிர் காணக்
கண் ஏது?
கருத்தெங்கே?

எஸ். வைத்தீஸ்வரன்

குருக்ஷேத்திரம்

கே. அய்யப்ப பணிக்கர்

(மலையாளத்திலிருந்து மொழி பெயர்த்தது 'நகுலன்')

[இக்கவிதையின் ஆசிரியர் ஸ்ரீ. கெ. அய்யப்பப் பணிக்கர் இளைஞர், கேரளத்தில் கவிதையுலகில் அவருக்கு ஒரு தனி இடம் உண்டு. மொத்தம் சுமார் இருபது கவிதைகளை எழுதியிருக்கிறார். அவைகளுள் சிறந்தது "குருக்ஷேத்திரம்".

இக்கவிதையில் கிரியாசக்தியின் வேகத்தினால் சிந்தனை சைதன்யமாகப் பிரகாசிப்பதையும், நுண்ணர்வின் பரிணாம விசேஷத்தையும், கலாபூர்வமான உருவச் சிறப்பையும்—இவை முழுவதும் ஒருங்கு சேரக் களிநடம்புரிவதையும் காணலாம். உருவம் பெரிதா உண்மை பெரிதா என்ற கேள்வி இலக்கியத்தைப் பத்றியவரை எவ்வளவு அர்த்தமற்றது என்பதை இக்கவிதையை வாசித்தபின் நாம் அனுபவபூர்வமாக அறியலாம்.

"குருக்ஷேத்திரம்' நாம் எல்லோரும் பெருமைப் படக் கூடிய ஒரு சாதனை. இலக்கியம் குறுகிய வரம்புகளைமீறி நிற்கும் ஒரு சக்தி. தாயுமானவர்கூட ஒரு இடத்தில் தான் கவிஞன் என்ற நிலையில் கடவுளுக்குக் கூட இரண்டாம் நிலையைத்தான் கொடுத்திருக்கிறார். இந்த அரிய கவிதையை மொழிபெயர்க்க மனமுவந்து அனுமதியளித்த ஸ்ரீ. அய்யப்ப பணிக்கருக்கும், இக் கவிதையை தமிழர் அறிவதற்கு இடம் கொடுத்த "எழுத்து" ஆசிரியருக்கும் (இன்று எனக்குத் தெரிந்த வரை தமிழில் வேறு ஒரு பத்திரிகையிலும் "குருக்ஷேத்திரக்' கவிதையைவெளியிடுவது சிரமம்தான்!) எனது மனமார்ந்த நன்றி.

கடைசியாக ஒரு வார்த்தை. இலக்கியத்தைப் பற்றிப் பேசுகையிலும் நாம் வள்ளுவரின் வான்மொழியை—உருவு கண்டு எள்ளாமை வேண்டும்—என்பதை நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும். உருவ வளர்ச்சியைக் கண்டு மிரண்டு நகைக்கும் பெரும்புலவரின்' வன்கூற்றுக்களும்,'' பண்டிதரின் கண்டனங்களும் இலக்கிய முயற்சிகளுக்கு எப்பொழுதுமே ஒரு சவாலாகத்தான் இருந்திருக்கின்றன. பண்டிதர்களையும் பெரும் புலவர்களையும் குறை கூறுவதிலும் அர்த்தமில்லைதான்—ஏனென்றால் அவரனைவரும் மலர்கசக்கி மாலை புனையக் கற்பவர்.]

"நகுலன்"

போர்வேண்டிக் களம்புகுந்த
என்புதல்வரும் பாண்டு புத்திரரும்
குருக்ஷேத்திரமாம் யுத்தபூமியாம்
தர்மக்ஷேத்திரத்தில் யாது செய்தனர்
என்பதை
நான் அறியக் கூறுவாய்
ஏ, ஸஞ்சயா, தீ என் மாட்டு,

அடிவானத்தினப்பால் அக்கினிதன் கோளத்தினை
கடிதுநீத்துச் சிதறித் தெறித்து உருவுயிர்த்த
நக்ஷத்திரமே!
உயிர்துடித்துக் கண்விழித்து இப்பாரின் குருதியேற்று
நாடிசலிக்க'
உருவுற்று உணர்வுகூர வருக நீ;

உயிரனைய என் வாழ்வெனப் பொலியும்
பரிவுகூரும் தாரகையே
கீழ்நோக்கிக் கண்விரியக் காண்;
விரித்த வான்கீழ் சலிக்கும் இவ்வுயிர் அரங்கில்
விழைந்து மக்களென்ன இணைந்து கூடும்
எங்கள் வாழ்வதனைக் காண்!
கேட்டிலையோ நீயுந்தான்
எங்கள் துயரெழும்பும் மௌனகீதங்களை?
நீரெனப் பொலிந்து ஒளியெனச் சிதறும்
நின் கண்ணீர்த்துளிகளைப் பொழிவாய்.
பார்மீது மனிதஜாதியின்
வாழ்க்கை வழிகளைக் காண்;
மக்கட் கூட்டம் நெருங்கித் தள்ளி முன் செல்லும்
சந்தைக் கூட்டம்; அதுதான் இப்பிரபஞ்சம்;
விற்பனைக்குச் சரக்குகள் தாங்கி வாடகைக்காரர்
வருகின்றனர், செல்கின்றனர்;
தங்களைத்தான் விற்பனை பேசி
தங்களைத்தான் விலைபேசி நிற்கும் கூட்டத்தைக் காண்
நீர்பொழியும் நயனங்களையும் ரத்தங் கொதிக்கும்
நரம்புகளையுங் காட்டி,
குருதி வெம்பிப் பருகும்
இச்சாயைகள் தம் உருவினைக் காண்;
வெம்பிப் புழுங்கும் அவர்தம் மேனியைக் காண்;
பூக்களைப் பின் வலித்து ஈர்க்கும் மண்ணைக்
குடைந்துசெல்லும் வேர்;
வேரைத்தாங்கிப் பூத்து நிற்கும் செடியைத்
தாங்கும் மண்;
அதுவும் அச்செடிதனைக் கவ்வித் தின்னும்;
மண்ணுலகில் மனிதர்கள் நாங்கள் இருந்து வாழும்
இப்புவியைக் கீழ்நோக்கிப் பார்;
மந்திரம் ஜெபித்துப் பிரதிஷ்டை செய்த களங்களில்
நெய்விளக்கின் சீதள ஒளியில்
வேதனையின் முனகல் உருகி வீழ்வதைக் கேள்;
சுகமருள்வாய், ஏ. ரிஷிகேசா!
சுகமருள்வாய், ஏ. ஜனார்த்தனா!
கூம்பிக் கூம்பிக் கூடுதட்டி எல்லுந்தி நிற்கும்
மனித ஜீவனைக் கசக்கிப் பிழிந்து
உயிர்த்தெழுந்து நிற்கும்
உல்லாசப் பவனங்களாகக் காட்சியளிக்கும்
மாடங்களும் கோபுரங்களும் ஆலயங்களும்
விரிந்து நிற்கும் இவ்விண்கீழ்
கண்ணைப் பிடுங்கிக் கைவல்யத்தின் காட்சிதனை
கண்ணுகக் கண்டு மகிழும்'கண்மூடிப் பக்தர்கள் தம்
கண்கள் வெறித்து நோக்கும் கூர்த்த மடங்கள்
முறையிடும் குரிசுகள்,
ஓங்கி வளரும்;
காணுமிடமெங்கும் கண்நிறையக் காணும்
பக்தகேந்திரங்களெனக் காணும் மாதாகோவில்கள்;
பக்திப் பிரவாகம் கொதித்துப் புனிதமாக நீறும்
தொழிற்சாலையில்,
வாழ்க்கையின் ஆயுதப்பிரயோகம்
பலவிதந் தொடரும்.
அங்கி தரித்து அகன்று செல்லும் மருத்துவர் குழாம்,
அவரை அணைந்து தொடரும் நர்ஸுகளாம்
கன்னியரின் குழு!
அறிந்திழைத்த பாவந்தனை அழிக்குமாபோல்
விரிந்தோங்கி நிற்கும் குரிசின் கூட்டம்;
அரிதென அவைதம் நிழலின்கீழ் கரைந்து படரும்
ஆருயிரின் முனகல் இழையும்,

நிறைநன்மை சூடிய மரியமே, வாழ்க நீ;
ஸ்திரீகளில் வாழ்த்தப்பட்டவள் நீயே;

காலைக் கதிரவன் ஒளிகாட்டும்
மோகனப் புன்னகை மிழற்றும் வதனங் காட்டி, அம்
மாயக் கதிரோன் பொன்னிறக் கதிர்கள் போல்
காலும் ஒளிக்கும் இரட்டைப் பின்னல் மிளிர,
சிரசினைக் காக்கும் வஸ்திரம் சூடி
வழி நடக்கும் வாலைச்சிறுமிகள்;
இருள்பரவ வருமிரவின் முன்னர்
மெல்லிசை பாடி நகரும் மாலைநதியென
கருநீலமணி பதித்துக் கண்ணிமைக்கும் சிற்றுடை
கண்கவரச் சூடி உள்ளமும் வதனமும் ஒளிவீசக்
கவனி குடி நகரும் இளம்மகளிர்!
கடும்பகலென ஒளிரும் தூயநிறங்காட்டும்
பரிவுகூரும் அன்பின் உருவமெனச் செல்லுந் தாயர்!
தோல்திரையுற்று கால் தடுமாற நடைபயிலும்
தள்ளிரவென நீங்கிச் செல்லும் மூதிற் பெண்டிர்;
கூருச் குருதிக் கருவவிகரட்டப் பாயும்
கட்டிளங் காளைகள்;
இவரனைவரும்
துடித்து நிற்க,
ஆணவமெனும் ஜ்வாலை வீசியெழ
வீறுற்றுப் பாயும் மானிடப் பெருக்கின் முன்
காலனும் பீதியுற்றுக் கால்வைத்து நிற்க
நீங்கிச் சலிக்கும் வாழ்க்கை யாத்திரையில்
வாட்டங்காட்டும் நெட்டுயிர்ப்புகள்
பாடுபட்டு நீள்வதேனோ?

பள்ளிதன் கனத்த மதிலின்பின்
கரிய அங்கி தரித்த குருக்கள் நிற்பர்;
வேதனைகொண்டு 'பிடையும்' பிளந்த நெஞ்சமென
வாடித் தளரும்
எரிகின்ற மெழுகின் திரிகள்.

2

நீலக் கருமுகில் வருடும் சேண்நெடுஞ் சோலை
யனைத்தும்
காலத்தீக் கிரையாகிக் கருகி மாயுங்கால்
வாதனையில் என்னுளம் நைந்துருகுவதை
வாசகா, நீ அறிவாயோ?

உருத் தெரியாக் கனவின்
செவ்விய வழியுந் தெற்றி
காலமும் நினைவுங் குழற,
மாய்ந்த கனவுகளின்
தேய்ந்த நினைவினை
கோடித் துணியில் தூளியென
கோடுற வரிந்து கட்டி
ஆழ்துயிலில் அதனை ஆழ்த்தி
மங்கிய சிவப்பும் மஞ்சளும்
மயங்கி வீழும் ஒளிநாக்குகள் படர
வயங்கி நிற்கும் சிதைகள் மீது
துயில் நீத்துத் துயிலெழ
தூங்கும் இத்தொட்டிற்கண்
துடக்குற்றுச் சுருண்டு துவன்று துயிலுறும்
பாடுகிடக்கும்
மடிந்த பிரேதங்களிவை!

நித்திலம் பொலியும் நீல வானிலிருந்தோ
துயிலூட்டும் இத்தாலாட்டுப் பாடல்களும்
ஊறிப் பெருகும்?

வானத்து நீலமனைத்தும் வாரியெடுக்கக் கைகள் நீட்டும்
இப்பாரிடம் நிற்கும்
தென்னைகள் மாட்டு
கலங்கிக் குழம்பும் இம்மண்ணிடம் காணும்
வெம்பியுருகி ஆவிகாலும்
இக்காயலின் திரைகள
சென்று பாயும்.

இத்திரைகளை நிகர்க்கும் திரைகள் தாங்கி
இக்காயல் போலும் ஒரு கரைகாணுக் காயல்
என்னகத்தும்
தாகமுற்றுத் தவிக்கும்.

கடுகனைய ஒருசிறு அணுவின் நடுவதனில்
விரியும் நடனந்தனில் படர்ந்து விரியும்
நாம்காணும் ஆயிரங் கோளங்கள் எல்லாம்:
எல்லையற்று விரியும் இப்பரவெளி போல் நம்
அகத்தூடும் விரியலாமே ஒரு கோளமுங் காண்;
சுகுணநிர்க்குண வீர்யப் பிரபஞ்சம் சகலமும்
பொங்கும் குருதியூடு வெம்பியெழும் உயிரூடு காண்;
நீ அறிவாயோ வாசகா
என்னுள்ளத்தூடு ஊறிவரும்
நட்சத்திர வீரியத்தை?

என் உள்ளக் கனவில் அலர்ந்த சிறுமலரே
இன்று நீயும் ஏனோஇச் செருக்குற்றனை?
என் உள்ளக் கனவில் பண்ணிசைக்கும் இசைச் செல்வ
இன்று நீயும் ஏனோ வாடித் தளர்வுற்றனை?

பூவொத்த பருவத்தில்
நீயும் நானும்
இப்பல்லவிதனைப்
பாடியவரன்றோ?
வாசகா,

நீயும் மறந்தனையோ
வேதனையில் தளரும்
உள்ளத்தில் விரியும்
வாதனைகளை?
மறந்தனையோ நீயும்
பச்சைக் கனவுகள் அனைத்தையும்?
பப்பா பப்பா பாடுவான்
வந்துற்ற இப்பாழுங் கும்பலுடன்
சென்று சேர்ந்தனையோ நீயும்?
வாழ்க்கை கூவி அரற்றி நிற்க
வேதாந்தக் கயிறு திரிப்பதேனோ?
''ஏன்'', 'ஏன்?'' என ஓராயிரங் கேள்வி
''நான்'', ''நான்'' எனத் தொடரும்.
சிந்தனை விடியுங்கால்
பிரச்னைகள் தொலையும்.
பிரச்னைகள் எல்லாம் கர்ப்பத்தில் மாத்திரம்;
பிரசவம் கழிந்தால் வருவதென்ன?

விண்ணில் திகம்பரத் தாரகைகள்
தங்கள் தங்கள் கரமும் காலும் வலைகளெனப் பின்ன
தம்மைத்தாம் புணர்ந்து தழுவும்;
விரிந்து படரும் நிலவொளியில்
சிந்திப்பாயும் அவ்வொளிப் பெருக்கில்
மண்ணின் நெட்டுயிர்ப்புகள் குமிழியென
வீங்கிப் புடைத்து விம்மி உடையும்;

இரவில் இனிய மணம்
விண்ணிலிருந்து இற்று வீழும்;
சீலைதரித்த மூடிய சன்னல்
கூடிய, மூடிய கதவுகள் பின்னே
தாழிட்ட அறையகத்தே வாழ்வின்
மோகதாக ஆசையின் நிராசையின் உயிர்ப்புகள்
மோகன ஒளியூடு மிதக்கும்;
காம்பில் துடித்து விரிந்த வண்ணக் குருவி மலர்கள்
தாகத்தில் தாம்தாம் சிந்திய நீரைத்தாமே பருகும்;
முன்பின் தம்மைத்தாம் அறியா இருசிறு தாரகைகள்
ஒன்றை ஒன்று தழுவ விரையும்.
நாறபுலம்
ஓங்கி நிற்கும்
மதில்கள் தாங்கி,
காவல் பூண்டு காட்சி அளிக்கும்
இக் கன்யா மாடத்தும்
சிநேக தாக மோகங்கள்
கூடிமோதி உடையும்.

கூடி வாழும்
பாடு கிடக்கும்
குடும்ப அரங்கிலும்
பருவம் பூத்த கனவு மலர்களும்
வறுமையாகி வாடிவாடி
மிடிமையுற்று மடியும்;
சூழும்பெரும் வெளியில்
வால்மீன் ஒன்று
இழிந்து விழும்;
நின்ற இவ்வுலகும்
மீண்டுந் தன்னில் லயித்து
நீண்டு சுழலும்.

3

எல்லுந்தி உருத்து நிற்கும் மலைகள்
பலவுங் காணும்,
இப்புவிதனில் நீ உயிர் தரித்து உருவங் கொண்டதேன்?
இலங்கைத் தீவுகள் அவை
கோமகன் தசமுகன் குருதி பருகவோதான்?
வனந்தனில் வைதேகியைக் களைவான் கொல்?
வகுத்துக் கூறுவாய் போலும்,
சுக்கிரீவன் யார்? வீடணன் யார்?
அறங்காட்டும் வசிட்டனும் இதனை
அறுதியிட்டுக் கூறுவான் கொல்
அனைத்துங் கண்டபின் அவ்விராமன் தன்
ஜீவித சஞ்சியில் மிஞ்சியதென்?
காலமும் பொய்ம்மொழியுங் கொல்;
எரிந்து புகைந்த நாம் எள்ளி நகைக்கும்,
வெறும் புல்லன்றோ
எவரும் புகழும் சாணக்கிய சாத்திரத்தின் சாரமுந்தான்?
நீதிகாண நீர் உகுத்து நெடிது நின்று
கீதை கேட்டு ஆறுதல் பெற அவ்வர்ச்சுனனும்
அல்லேன், நானுங்காண்.
மீண்டும் இம்மண்ணில் வேதனை சூழ
ஈண்டுவந்துற்ற ஒரு சிறுகூடென
ஈன்று உடலெடுத்து உருவங்கொண்டேன் காண்.
காணத் தோற்ற சாலப் புகுந்த
நுண்ணூர்வும் விரியும் பாசமும்
இன்னும் பின்னி இழைகின்றன என்னுள்.

சேண்நெடுந் தூரமிருந்து நான் வருங்கால்
நீளும் அவ்வழிதன்னில் என் அப்பனைக்கொன்று
ஆவிகொடுத்த அம்மைதனைப் புணர்ந்து பேரனேன்
நான் ஆயினும், ஆயவை அவற்றில் நீ
சாலக் காண ஒன்றுண்டு.
ஈதெல்லாம் ஆருயிர்நாடி ஆர்க்கும்
ஆருமறியா இசைமாறிக் கதறும் விசேஷங் காண்.
பாரதம் செப்பிய ஆரியனும் அவ்வியாசனும்
ஓர்பகல் போஜனம் ஆர்கையில் அவ்விதுரன்
காண உண்மையின் ஓர்வடிவங் காட்டினன்.
மீண்டும் நிந்தியமும் நீள் துயிலில் ஆழ,
ஆண்டவர் அனைவரும், கூறும் இதிகாசங்கள்
காணக் கண்மலருங்காலும், கேவலத் துயிலில்
காட்சியின்றிக் காரிருளில் நீள்துயிலுற்றனர்.

4

கரிய இருளில் நினைவுகள் அவை
அருகி அருகி மறைக;
மறதி எனும் முதியவள்
இரு முலையும் தளரும்;
இருளும் நிழலும் தம் கருணை
அருளி நிற்கும் இப்புவிதனில்
இருளும் ஒளியும் இணையும்
இரவும் பகலும் இல்லின் வெளியில்
கண்மலரும் இருகதவென
விரியும், குவியும்;
இனியும் விரியும், இனியும் குவியும்;
இவ்விரண்டும் ஒருசேரக் குவியும்
தினமும் வருவதுண்டு;

எனினும்
நம்மகம் சுடருங் கனவுகள்
அன்றும் நிற்கும்;
மறதி, வெறும் உவகைத் திரை
ஒன்றினை ஒவ்வும்;
மறுகுமிப் புவியின் ஒருதனி மதமென
அதனைக் கருதலுமொக்கும்;
அவ்வரிய சீரிய மதலைப் பருவத்து
சுத்த சூன்யமதில்
நீயுற்றுநின் கருநீலவிழிகளால்
ஓர்நீள் நிழல் விரித்தனை;
முதுமை சுமக்கும்
இவ்விளமையின் இஷ்டதெய்வமென
இம்முத்தங்கள் நிற்கும்;
அன்று
மண்ணும் விண்ணுமெவ்வும்
இவை அனைத்தும் இரசித்த இவ்விரு விழியும்
இன்று மறதிஎனும் திட்டையமர்ந்து
சொல்லவித்துப் பல்லிளித்துப் பரிகசிப்பது ஏன்?
நாம்பெற்ற இவ்விண்ணமுதம்
தீருமென்றோ?
கூறும் விஸ்வாச பாங்குள்
மேவும் மெய்யினை
இதனினும் அறியுங் கொல்?
பண்டு கண்ட கனவின்
வரிசையென வந்த
கடைசிக் குறியும் நல்கி
மறைந்த மதங்கள் அனைத்தும்
எள்ளி நகைக்கும்; முகம் வலிக்கும்;

பொதுக்கூட்டத்தில் ''ஞரு''வெனக் கூவி
அவை அற்று முடியும்.
சுற்றி நிற்கும்
அமர உலகுகள்
ஒவ்வொன்றும்
இடிந்து சரிந்து
அகன்று நீள
நின்று வாழ
தின்று சுவைக்க
வருவதென்ன?
வருவதென்ன?
கனவில் துயில்வதும்
நினைவில் மருள்வதும்
இச்சைதனை
நிச்சயங் கூட்ட
கச்சை கட்டுவதெனத் தெளியும்.
வழிவகுக்கக்
கையுதவுங் கொல்?
நம் கண் துணைபுரிய
காலும் அதனைத் தொடர
மண்ணில் செவ்விய வழியில் செல்வோம்.
உய்யும் வழியும் அதுவே.
இங்குற்ற பின்
முன்னேது? பின்னேது?
கேள்விகளனைத்தும்
கோளுற்று இகலி
பகையுற்று நிற்குங் கொல்?
உயிரும் உவகை வேண்டி
நின்று துடிக்குங் கொல்?
நம்முன் நமக்கென
முடிந்த செயல்களைச்
சுரண்டிச் செல்லும்
விரைந்து மறையும்
பொழுதினை ஐயமுற்று
அதனைக் கண்டு
நிற்பது முண்டு.
அன்னையின் அருளென
இச்சைகள் பின்னிய,
இருக்கும் இவ்வுலகும்
நம்மை இழுத்துக் கவர
நின்று சூழலும் அவ்வமயம்,
நமது இச்சைதனைச் சிக்கெனப் பிடிக்க
வெதும்பி நின்று வறிது நிலத்தில்
விழுவது முண்டு.
உயிரின் இன்னிசை
சப்திக்கும் அத்தருணம்
அதன் அடிவேர் துவளும் அவ்வமயம்,
சரியும் தவறும் சமைத்து
வறிதாகி வீழும் அவ்வமயம்.
மறதியின் கூடு புகுந்து
இசைபாடி நிற்போம் நாம்.
வெண்ணெருப்பு வீசிய விதைகள்
விரிகின்ற ஆழியின்
காலக் கருவில் ஆழ
புத்தினங்கள் மீது இவருந் தருணத்து
காலத்தை நிமிஷத்தில் கொல்லும்
அக்காலமது நீள் மோகத்தூடு
செயல்வழிச் சிற்பம் சமைக்கும்
அவ்வமயம்,
உயிரின் கனவில் தரம் கண்ட மாயமும்,
பெற்ற இன்பமும்,
உற்றுணர்ந்து வெருட்டிய உண்மைகள் அவையும்,
ஒருங்குடன் இசைத்துப் பின்னிய
மோகமெனும் ஒரு அரிய சிற்பம்—
கூறும் இக்காலமும் கெடிது வளர்க.
இடைவழி நின்று
காலம் செதுக்கும் கனவுதனை,
நாம் கண்டு நிற்பதுண்டு.

5

நாம் அனைவரும் ஒருசேர உதித்து
போகுந் தருணம் ஒருசேர மரிக்கும்
இம்மண்ணுலகின் அநித்திய வழிதனில்
இருந்து சலிக்கும் ஒரு சிறு தினங்கள்
இங்கு நாம் வதியும் பாயல்கள் அன்றோ
இவ்விடங்காணும் இக் கூடாரங்களும் கல்லறைகளும்;
இணைந்துகூடி இதமுறக் கழிந்த பகல்
அனைத்துமே காண் இப்புவி இன்பமயம்;
அர்த்தமும் அனைத்து: தத்துவமும் அதுவே
இப்புவிதனில் இருந்து படரும் நம் முயிர்க்கு;
என் அன்பின் வின தாரகையே, என்னுயிரே,
விண்ணில் சுடரும் ஒளி நீ ஆயினும்
என்னுள்ளத்தில் விரிகின்ற அன்பு மலரின்
உற்ற உறைவிடமுமன்றோ நீ?
நான்
கண்டறியாக் கனவுகள் நல்கி,
கற்றறியாத மொழிதனை அருளி
உற்றுணர்ந்து தொட்டு அறியாத
அழகெனக் கூறும் மெய்யென,
அதன் இன்னுயிரை அருஞ் செல்வமதனை
வந்தவொரு அரிய மதலையென எனக்கு நல்கிய
தாரகையே,
விண் நின்று நீ ஒளிரக் காண்பேன்.
உன்னருள் என்னுயிருடு பரவ
இப்புவியும் ஒளிர்க,
இவ்வுயிரின் ஆவி பருகி,
மோகம் புணர்ந்து,
நாம் இருவரும்
மாறிப் புகுந்து
இருவருங் கூடித் திளைத்த
உயிரின் இன்னமுதினை,
சலிக்கும் பொழுதினையும்,
இடமும் பொழுதும் அறுத்து வீசிய
நீல ஒளிச்சிகை வீசும்
திரிகள் எழும் அவ்வாழியென
அகன்று விரிந்து காணும்
அலகிலா வளங்கொழிக்கும்
இவ்வாழ்வின் முடிவில்
நான் நின்று அமைதியூடு
நெய்தெடுத்துக்
கூட்டித் தொடுத்த
இவ்வரிய இசைதனை
இவ்வுலகங்கள்
செவிசாய்த்துப் பருகுங் கொல்?
என் சிந்தையை நின்னதாக்கி
திவ்யத்தின் விதையினை என்னில் தாங்கி

உன்னோடு உயிர்த்துப் பெருகிப் பொலியும்
இவ்வுயிரினொளி
பூர்ணத்திலிருந்து நாம் இருவரும்
கழன்று பிரியுங்கால்
நெடிது நிலைத்து நிலவும்
புது ஒளியெனப் படர
நிலைகாக்கும் நன்கனவுகள் பற்பலவும்
நன்மை பெருகும் பல்லுயிரும்
இனியும்
இம்மண்ணும் வளங்கொழிக்க
வந்து சேரும்;
விண்ணின்று சுடரும்
இப்புதிய தாரகைகளூடு
இழிந்துபாயுமிவ்வொளித் துளிகள்
நம்மில் ஒரு சேரப் பிறந்து மடியும்
இவ்வையத்தின் விரிகின்ற கூடத்திற்
காணும் திண்ணையில் மீண்டும்
நாமறியா இனிமை கூட்டும்
நீடிய உறவுகள் நிவர்ந்து எழ
அரங்கின் திரை விலக
அனைவருங்காணக் கட்சியதனை அருளும்
ஒருவரை யொருவர்
நாமிருவரும் அறியும்
இவ்வமயம்,
இருவருங் கூடிப் புணருமிவ்வமயம்,
நீண்டு பெருகும்
விரிகின்ற இவ்விண்கீழ்
வெம்பிக்கொதித்துக் கனலும் காலத்தின்
விரிகின்ற உயிரதனில்
மண்ணுள் அனல் தகிக்க
வேருந் தலைகாட்ட
பறவைகள் தம் குஞ்சுகள் முலைசுவைக்க முன்னும்
இவ்வமயம்
அர்த்தங்காட்டும் என் நயனங்கள்
அருள் பொழியும் நின் கதிருடு சேர
பொலியும் இம் மோகப் பிரபஞ்சம்;
மொக்குகள் வர
மலர்கள் அலர
கனிகள் வளர
விதைகள் தூவும்;
காணும்
இவ்வேழுலகனைத்தும் ஆழ்த்துயிலிலும்
அலைகைக் கணுக்களிலும்
அறிவிழந்து காண
மன்னுயிரின் வேதனை பூண்டு
வார்தாவில் நான் தவங்கிடந்த அவ்வமயம்
சாந்தி நாடி நவகாளி வீதியில் நான் தேடித்திரிகையில்,
யாது கூறினை நீ
இவ்வுலகின் நன்மை தீமையினைக் குறித்து?
தத்துவங் காட்டும் கூர்த்த மதிநுட்பமனைத்தும்
சப்தமடங்கிச் சுற்றிலும் தளர்ந்துவீழ
கூறவொரு வேத வாக்கினை ஓதுவர் யார்?
வாய்ப்பந்தல் விரித்திட வருவரும் உண்டுகொல்?
கூறும் இத்தத்துவங்கள் முழுதும்
இப்பாரின் மறையினைக் கடுகளவு
சாலச்சிறிய செப்புகளில் திணித்துக் காட்டும்;
தத்துவமனைத்தும் கண்ணைப் பறிக்கும்
காட்சியையும் மயக்கும்;
வேறு என்ன செய்யும்
காணும் தத்துவமனைத்தும்?
மண் சமைத்த இக்காலவேதிமேல்,
ஒலி அவிந்த தாள வரிசைகள்
வலிந்து கூட்டிய தத்துவ அர்த்தங்கள்;
உயிரின் தன்மையில் இயங்கும்
கருவிகள் எழுப்பும் ஆத்ம
கானமெல்லாம், பர்—பர் அலறுகின்றன,
நாதஉலகு அலைதள்ளும் திரைகள்
தாளமதனைச் சாய்த்துத் தள்ளும் மீறிப்பாயும்
செருக்கின் பிரவாகம்;
நாமும் இம்மோனத்தில் நாடிதுடித்து நிற்கையில்—
போதித் தருவின் நிழல் தேடி
ஞானம்காணச் செல்வதுண்டோ?
நம் உள்ளத்துப் போதம் உதிக்குமெனின்.
கால்வரிக் குன்றின் கதையையும்
நாம் இசைப்பதுண்டோ
கால் மணி நேரம் நாம் மனிதரென நிற்பின்—
நாம் புணரும் கனவின் திவ்ய நாபியில்
நாம் உயிரெடுத்து நிற்க முடியுமெனின்.

இலங்கை செய்திகள்

இலங்கையிலுள்ள தமிழ் எழுத்தாளர்கள் அனைவரையும் அரசியல், கட்சி, மத வேறுபாடின்றி ஒன்று சேர்த்து ஒரே அமைப்பின் கீழ், கொண்டுவருவதற்கு யாழ்ப்பாணத் தமிழ் எழுத்தாளர் சங்கம் எடுத்த முயற்சியின் காரணமாகச் சென்ற ஞாயிற்றுக்கிழமை (4-11-62) யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நடைபெற்ற எழுத்ளர் கூட்டத்தில் அகில இலங்கை எழுத்தாளர் சங்கம் தோற்றுவிக்கப்பட்டது. பின் வருவோர் உந்தியோகத்தர்கலாகத் தெளிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: S.ஸ்ரீநிவாசன் M.A; துணைத் தலைவர்கள், தி. ச. வரதராசன். கனக. செந்திநாதன். மு.செல்லையா; செயலாளர்; இ.மகாதேவா; துணைச் செயலாளர்: சி.சரவணபவன்; பொருளாளர்: சு. வேலுப்பிள்ளை. ஒன்பது பேர் கொண்ட செயற்குழு ஒன்றும் தெளிவு செய்யப்பட்டது.

இலங்கை எழுத்தாளர்களுடன் தொடர்பு கொள்ள விரும்பும் வெளி நாட்டு எழுத்தாளர் சங்கங்களும் இலங்கைக்குச் செல்லவிருக்கும் எழுத்தாளர்களும் செயலாளருடன் தொடர்புவைத்துக் கொள்ளலாம். அவருடைய முகவரி: இ. மகாதேவா, (தேவன்-யாழ்ப்பாணம்) "ராஜேஸ்வரி பவனம்; பரமேஸ்வரக் கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்.

இலங்கையிலிருந்து வெளியாகும் கலை இலக்கியத் திங்கள் இதழான "கலைச் செல்வி"யின் சார்பின் எழுத்தாளர் பேரவை ஒன்று சென்ற 4-11-62 ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நடைபெற்றது. நாட்டின் பல பாகங்களிலுமிருந்து எழுத்தாளர்கள் பலர் பேரவைக்கு வந்திருந்தனர். ஈழநாடு" ஆசிரியர் திரு.இராஜ அரியரத்தினம், தலைமை தங்கினர். பேரவையின் சிறப்பு நிகழ்ச்சியாக "சிறுகதைகள்" என்ற தலைப்பில் ஓர் உரைக் கோவை நடைபெற்றது மேல் நாட்டு சிறுகதைகள் பற்றி, S. ஸ்ரீநிவாசன் M.A. அவர்களும், இந்தியச் சிறுகதைகள பற்றி தரும சிவராமு அவர்களும் இலங்கைச் சிறுகதைகள் பற்றி சு. வேலுப்பிள்ளை அவர்களும் ஆராய்ச்சி நுட்பம் நிறைந்த பேருரை ஆற்றினர்கள்.

எழுத்து அரங்கம்

பிரக்ஞை ஓட்டம்

"ஒருவரது பிரக்ஞை நிலையை உருவாக்குகிற, நிச்சயமில்லாததும், வரையறுப்பும் இல்லாததுமான சிந்தனைகள், மன எழுச்சிகள், உணர்ச்சிகள் ஆகியவை அருத தொடர்ச்சியாக வரும் ஒரு மன ஓட்டத்திற்கு 'stream of consciousnss' என்று பெயர்" (சி. சு. செல்லப்பா—எழுத்து ஏடு 10).

"...பேச்சு ஒலியாக வெளிவருவதற்கென அவற்றை ஒழுங்குபடுத்துமுன் அவை பிறக்கின்ற பொழுதிலே உதிக்கின்றதொரு முறை, இலக்கண வரம்புகளுக்கும், சம்பிரதாயங்களுக்கும் கட்டுப்படாததொரு இயல்பு—இவைகளை அப்படியே எழுத்தாகப் பெய்வதுதான் இந்த உத்தியின் முக்கிய அம்சம் எனலாம். பேசப்படுவதற்கென அல்லாமல், மனநிலைகள் பலவற்றின் விளைவாக எழுந்து, வெளிக்கிளம்பாது மறைந்து உள்ளொடுங்கிவிடும் எண்ணங்கள், அந்த எண்ணத்தின் குறியீடுகளான சொற்கள் என்பன நனவோடை முறையின் முக்கியமான கூறுகள். இப்படியான வரையறையற்று மங்கலாகியும், புகைச்சலாகியும், தெளிவின்றிக் கிடக்கும் மனக்குகை ஓவியங்களை இனங்கண்டு கொண்டு, அவற்றின் இருப்பைக் காட்டிக் கொடுத்தவர் என்ற முறையிலேதான் ஹென்றிஜேம்ஸின் வோடை முறையின் வழிகாட்டி என்று கூறலாம்." (முருகையன்—எழுத்து—நவம்பர் 59.)

"பேச்சு நிலைக்கு வராதஅடிமனவோட்டத்திலே எண்ணங்கள் திட்டவட்டமாக கோர்வையாக உருவாகாத நிலையின் சித்திரம் இது (ஜேம்ஸ் ஜோய்ஸின் எழுத்தின் மொழிபெயர்ப்பு) ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாதது போலத்தோன்றினுலும், ஒன்றைப் பார்த்த உடனே எப்போதோ' எதையோ பார்த்த—அதனுல் ஏற்பட்ட ஒரு உணர்வு—பொருந்தியும் பொருந்தாமலோ கூடவந்து கலந்துகொண்ட, முறியாத ஒரு உளநிலைத்தோற்றத்தை இந்த வரிகளில் பார்க்கமுடிகிறது. இதை வார்த்தைகளில் அடைப்பதில்தான் நனவோடை நாவல் ஆசிரியரின் தனித்திறமை இருக்கிறது" (சி. சு. செல்லப்பா—எழுத்து 13.)

"புற நிகழ்ச்சிகள் நடந்துகொண்டிருக்கும் அதே சமயத்தில் மனத்துள் எண்ணற்ற உணர்வுகளும், சிந்தனைகளும் தோன்றுகின்றன; அவை ஓர் ஒழுங்கில் தோன்றுவனவல்ல. கால ஒழுங்கில் செல்வனவல்ல; எத்தகைய ஒழுக்க விதிகளுக்கும் கட்டுப்படுவனவல்ல. ஆறு ஓடிக்கொண்டிருப்பதுபோலப் பிரக்ஞை வெளியில் பெரியதும் சிறியதுமாக உணர்வுப் பொறிகள் தோன்றி மறைந்துகொண்டிருக்கின்றன. மனதின் அடித்தளத்தில் தோன்றும் அவற்றை அப்படியே சிறைப்படுத்தினுலன்றி, உண்மையான மனிதனைச் சித்தரிக்கமுடியாது என்று நம்பினுர் ஜோய்ஸ். பிரக்ஞையில் எழும் மனச்சலனங்கள் அத்தனையையும் கோவைப்படுத்தி உருவம் கொடுக்க முனைந்தார் அவர்" (க. கைலாசபதி—ஞாயிறு தினகரன் 1-8-61).

"நனவோடை உத்தியின் பிறப்பிற்கு முன் வெளி நடப்புகளை நாம் அறிந்தோமேயல்லாது, அந் நடப்புகளுக்கு உந்துதலாக இருந்த எண்ண எழுச்சிகளை அவற்றின் சுய உருவில் நாம் அறியவில்லை. ஆசிரியரே இடை புகுந்து வியாக்கியானிக்கும் பொழுது, அவ்வெழுச்சிகளை இரண்டாம் மனிதர் மூலமாகவே அறிய முடிந்தது. அந்த அளவுக்கு அவை இரண்டாம் மனிதனின் கறைபட்டவை. சுய நிலையிலிருந்து சொல்வதாக எழுதப்பட்டவையும் ஆசிரியர் கூற்றுகச் சொல்லப்பட்டவையும் குறையுடையனவே. மனவோட்டத்தில் எழுந்த உணர்ச்சிகளைத் தரப்படுத்தி, சாதக பாதகங்களை நினைத்து மிஞ்சியவற்றை ஒழுங்குபடுத்தி, சீர்தூக்கி, வார்த்தைகளாக சிதைந்து உருப்பெற்று வெளிவந்தவை,அவை மனத்தின் எண்ண ஓட்டங்களின் உண்மை உரு அல்ல. ஆகவே இவ்வுத்தி இதுவரை நம்மிடமிருந்து மறைந்திருந்த ஒரு பிராந்தியத்தின் நடப்புகளைப் பற்றிய உண்மைகளைக்கூற வந்த கருவி...... அணையிட்டுத் தடுத்து கால்வாய் வழி எடுத்துதேக்கி ரஸாயனப் பொருட்களை இட்டு சலித்து சிறுசிறு குழாய்கள் வழியாக அளிக்கப்படும் குடிதண்ணீர் அல்ல அந்த உத்தி. கண்ணிய மனதின் உன்னதத்தையும் காணலாம். மனவிகாரங்களின் அருவருப்பையும் காணலாம். அதன் சுயரூபத்தில் இருப்பதில் தான் நனவோடை உத்தியின பண்பு உள்ளது. இதில், ஒதுக்கல், நீக்கல், தரப்படுதல், பட்டை தீட்டல் அறைகுறைகளை நிறைவாக்கி உருப்படுத்தல் விவகாரங்களைக் காணமுடியாது. என்னதான் உத்தியின் சித்தாந்த நோக்கில் கூடாதென்ருலும், அவர அவர் மனப்போக்குப்படி சிறிய, பெரிய அளவுக்கு ஒதுக்கல், பொறுக்கல் ஒழுங்குபடுத்தல் நடைபெறத்தான் செய்கின்றன. அந்த உத்தியின் சிறப்புகளில் ஒன்று, நினைவோட்டத்தின் மூலமே, புறநிலைகளைப் பற்றிக் கூருமலேயே உணர்த்திவிட முடியும்" (வெ. சாமிநாதன் எழுத்து 43-வது ஏடு).

"உலகப் புகழ்பெற்ற மனேதத்துவவாதியான வில்லியம் ஜேம்ஸ், உள்மனதின் அனுபவ ஓட்டத்தைக் குறிப்பிடுவதற்காக 'பிரக்ஞை ஓட்டம்' (Stream of consciousnss) என்ற தொடரை தனது "மனேதத்துவக் கோட்பாடுகள்" என்ற புத்தகத்தில் 1890ம் ஆண்டு குறிப்பிட்டிருந்தார். இத் தொடர் இப்பொழுது இலக்கியததிலும் இடம் பெற்றுவிட்டது. எடெளவாட்டு ஜாடின் (Edouad dajardin) என்ற பிரெஞ்சிந்திய நாவலாசிரியரே முதன் முதலாக இவ் உத்தியைக் கையாண்டார் என்று சொல்லப்படுகின்றது...எழுத்தாளன் தனது கதைக்குவேண்டிய, இன்றியமையாதவற்றை (கதாபாத்திரத்தின் சிந்தையில் தர்க்கரீதியற்றுப் பாயும் சிந்தைகளும், அனுபவவுணர்வுகளும்) மாத்திரமே தெரிந்து,கலைநயமாக தீட்டுகிருன். கதாபாத்திரம் நிஜ வாழ்வில், ஒரு குறிப்பிட்ட சம்பவத்திற்கு அப்பாற்பட்டவற்றைப்பற்றி மனதில் நினைத்துக்கொண்டாலும், எழுத்தாளன், அப்பாத்திரத்தின் குறிப்பிட்ட சம்பவம் சம்பந்தமான எண்ணக் கோவைகளை மாத்திரமே வரைகிருன். மொழியளவைப் பொறுத்த வரையில், ஒருவித கட்டுக்கோப்பான, தர்க்கரீதியான இலக்கண அமைப்பு இல்லாமல், அச்சிந்தனை ஓட்-

டம் இருந்தாலும், அவ் ஓட்டம், மனோவியலளவைப் பொறுத்தவரையில் மிக மிக, இணக்கமுடையதாக இருக்கவேண்டும்...இவ் உத்தியை ஜேம்ஸ் ஜோய்ஸ் மிகமிக வெற்றிகரமாகக் கையாண்டிருக்கிறார். வேறு சில மேனாட்டு, தமிழ் ஆசிரியர்கள் இவ் உத்தியின் **சாயலில்** நாட்டங்கொண்டு படைப்புகளைச் சிருஷ்டித்திருக்கின்றனர். (கே. எஸ். சிவகுமாரன்—கலைச்செல்வி—ஆடி' 62)

மேற்கண்ட மேற்கோள்கள் மூலம், நேயர்கள் Stream of consciousness என்ற உத்திபற்றிப் பொதுவாக அறிந்திருப்பார்கள். இந்தப் பதத்திற்கு "நனவோடை" என்று தமிழாக்கம் செய்தவர் முருகையன் அவர்கள் என்று நினைக்கிறேன். 'நனவோடை' என்பதிலும் பார்க்க "பிரக்ஞை ஓட்டம்" (தூயதமிழாக்கம் அல்லாவிட்டாலும்) என்பதே பொருத்தமுடையது என்று நான் நினைக்கிறேன்.

டேவிட் டெயிச்சே (David Daiches) என்பார் தான் எழுதிய "நாவலும் நவீன உலகும்" (The novel and the modern world) என்ற நூலில் Stream of consciousness பற்றி வருமாறு எழுதியிருக்கிறார்:

"It provides a method of presenting character outside time and place, in the double sese that first, it separates presentation of consciousness from the chronological sequance of events-and second, it enables the quality of a given state of mind to be investigated so completely by means of pursuing to their end the remote mental associations and suggestions that we do not need to wait for time to make the potential actual before we can see the whole."

"இரண்டு விதத்தில், காலத்தையும் இடத்தையும் கடந்தவர்களாகப் பாத்திரத்தைச் சிருஷ்டிக்க, இந்த உத்தி உதவுகின்றது. ஒன்று: கிரமத்தொடர்பான நிகழ்ச்சிச் செறிவுகளிலிருந்து பிரக்ஞையைப் பிரிக்க உதவுகின்றது. இரண்டு, குறிப்பிட்ட ஒரு மனோநிலையில், ஒரு பாத்திரத்தின் மனத்தொடர்புகள் பற்றி முழுதாகவே, காலத்துக்குக் காத்திருக்காமல், அறிந்துகொள்ள முடிகின்றது.

"The art of writing made simple" என்றதொரு அமெரிக்கவெளியீட்டில், Stream of consciousness பற்றி பின்வருமாறு எழுதப்பட்டிருக்கிறது.

"It is a flowing of thoughts that surge to the level of mind where the individual becomes aware of them. They are not unconcious or subconscious thoughts which lie beneath the surface of awareness and are apprehended only through symbolism of dreams or through the careful probing and re-construction of the professional analyst......when thoughts do reach the level of awareness, they permit the character, whose thought processes are being exposed to range far and wide, to overcome the conventional barriers of time and space which would otherwise limit action of the story."

"புலனுணர்வுக்கப்பாலுள்ள அடிமன அல்லது பிரக்ஞையில்லா எண்ணக்கோவை அல்ல பிரக்ஞை ஓட்டம்...காலத்தையும் இடத்தையும் கட்டுப்படுத்தும் சம்பிரதாய எல்லைக்கோட்டை மீறிக் கதாபாத்திரம் சிந்திப்பதற்கு இந்த உத்தி உதவுகின்றது.

"பிரக்ஞை ஓட்டம்" என்ற உத்தியுடன் நெருங்கிய தொடர்புகொண்ட இன்னுமொரு உத்தியின் பெயர் "உள்ளார்த்த—தற்பாஷிதம்" (தற்காலிகமாக இதனை "உள்ளார்த்த—தற்பாஷிதம்" என்று அழைப்போம்). இதனை ஆங்கிலத்தில் Interior monologue என்று அழைப்பர். இதுபற்றி விளக்குகையில், கடைசியாகக் குறிப்பிட்ட வெளியீடு, பின்வருமாறு குறிப்பிடுகின்றது:

"Like stream of consciousness, it is a method of presenting a character's conscious thoughts. But whereas the former appears to consist of already formulated ideas on which the character is currently meditating-interior-monologue consists of thoughts arising instantaneously in the present. Interior-monologue is therefore more personalized and more intense than stream of consciousnes and should be reserved for moment of highly dramatic self analysis. To employ it at any length is to strain readers credulity sense, because it is practically equivalent to dialogue,the reader finds it difficult to believe a character would speak to himself to any appreciable extent."

"ஒரு பாத்திரத்தின் பிரக்ஞையறிவுள்ள எண்ணங்களைச் சித்தரிப்பதற்கு, "பிரக்ஞை ஓட்ட உத்தி"யைப்போல, "உள்ளார்த்த-தற்பாஷித உத்தி,யும் உதவும் ஒரு முறையாகும். ஏற்கனவே உருவாக்கிய ஞாபக எண்ணங்கள் பற்றிச் சிந்திப்பதை, 'பிரக்ஞை ஓட்டம்' உள்ளடக்கினால், 'உள்ளார்த்த—தற்பாஷிதம்' நிகழும் காலத்தில் உடனுக்குடன் எழும் எண்ணங்களை உள்ளடக்கும். எனவே, 'பிரக்ஞை—ஓட்டத்திலும் பார்க்க 'உள்ளார்த்த—தற்பாஷிதம் (பாத்திரத்தின்) மிக நெருக்கமான, மிகச்சொந்தமான, மிக இறுக்கமான சிந்தனை ஓட்டமாகும்.,'

தமிழிலும்தான், ஆங்கிலத்திலுந்தான், பிரக்ஞை ஓட்ட உத்தியும், உள்ளார்த்த—தற்பாஷித உத்தியும் கலந்த எளிதிற் பிரித்துப் பார்க்கக்கூடிய விதத்தில் அல்லாத முறையில் படைப்புகள் சிருஷ்டிக்கப்பட்டிருக்கின்றன, எனவேதான், 'பிரக்ஞை ஓட்ட' உத்தியில்தான்—இவை எழுதப்பட்டிருக்கின்றன என்று திட்டவட்டமாகச் சில தமிழ்ப்படைப்புகளைக் கூறிக்கொள்ள முடியாதிருக்கின்றது. அதே நேரத்தில், அவற்றில் அந்த உத்தி கையாளப்பட்டிருக்கும் முறையையும் அவதானிக்க முடிகிறது. அதாவது அந்த **உத்தியின் சாயலில்** எழுதியவற்றையும் பொதுவாக அந்த உத்தியில் எழுதப்பட்டவை என்று சொல்லிவிடுகிறோம். இவ் உத்தியைக் கொண்டு நிறையத் தமிழ்ப் படைப்புகள் வெளிவருமட்டும், 'பிரக்ஞை ஓட்ட உத்தி'யின் சாயலில் எழுதியவர்கள் என்று பின்வரும் தமிழ்ப்படைப்பாளிகளை அழைப்பது தவறு என்று நான் நினைக்கவில்லை. புதுமைப்பித்தன், மௌனி, லா. ச. ரா. பிச்சமூர்த்தி, சி. சு. செல்லப்பா, ஜெயகாந்தன், எஸ். பொன்னுத்துரை, "வாஸந்தி" (ஆனந்தவிகடனில் முத்திரைக் கதை எழுதியவர்), காவலூர் ராசதுரை, செ. யோகநாதன் ஆகியோர்.

கொழும்பு **கே. எஸ். சிவகுமாரன்**

எழுத்து பிரசுரம்
சந்தா திட்டம்

ஜீவனாம்சம்	சி. சு. செல்லப்பா	ரூ. 4·00
காட்டு வாத்து	ந. பிச்சமூர்த்தி	ரூ. 5·00
அறுபது	சி. சு. செல்லப்பா	ரூ. 5·00
புதுக் குரல்கள்	தொகுப்பு	ரூ. 4·00
எதற்காக எழுதுகிறேன்?	தொகுப்பு	ரூ. 2·00
		ரூ. 20·00

கவனிக்கவும்

எழுத்து பிரசுரம் (*திருத்திய*) சந்தா திட்டப்படி ரூ. 20–00 பெறுமானமுள்ள 5 புத்தகங்களும் சலுகை விலையில்,

ரூ. 16-00 க்கு

கிடைக்கும். தபால் செலவு உள்பட.

ஐந்து புத்தகங்களும் தயாராகி விட்டன. திட்டத்தில் உறுப்பினர்களாகச் சேருவோர் உடன் எழுதவும் :

எழுத்து பிரசுரம்
19-A பிள்ளையார் கோவில் தெரு
சென்னை-5

EZHUTTHU Edited and Published by C. S. Chellappa, from 19-A, Pilliar Koil Street, Madras-5.
Printed by M. Ramanatha Rao for Central Press, 97, Big Street, Triplicane, Madras-5.